XÉa® òfnHª âÆ‹

# â i r K f «

**bgÇah® g ‹ K f¤njh‰w«**



புதுமலர்பதிப்பகம்
கோவை

ஓவியர் புகழேந்தி வழக்கமான ஓவியர்களிடமிருந்து மாறுபட்டவர். கலைமூலமாக முற்போக்குக் கருத்துக்களை, சமுதாயப்பணிக்கான சாதனமாக ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு ஓவியங்களை வரைந்து கொண்டிருப்பவர். அதற்காக நிறைய பொருள் இழப்புக்கும் ஆளாகி இருப்பவர். எந்தக் கலையும் பணம் சம்பாதிக்கும் பாத்திரமாக ஆக்கிக் கொள்கின்ற இந்தக் காலத்தில் அவர் நினைத்திருந்தால் பொருள் ஈட்டுகின்ற சாதனமாக ஆக்கி யிருக்கலாம். ஒரு சில ஓவியர்கள் வகைவகையாக நடிக நடிகைகளுடைய படத்தை வரைவதைப் போல வரைந்து தள்ளியிருக்கலாம். அதனால் பெருத்த புகழும், சம்பாத்தியமும் கிடைத்திருக்கலாம். ஆனால் மரியாதை கிடைக்காது. ஓவியர் புகழேந்திக்கு இன்றைக்குக் கலை இலக்கிய உலகத்திலே இருக்கிற மரியாதை இருக்கிறதே அது பெரியது. அதைச் சாதராணமாகச் சம்பாதிக்க முடியாது. ஏற்கனவே பூகம்பத்தின் சேதங்களை நம்முடைய இதயங்கள் எல்லாம் கண்ணீர் வடிக்கிற வகையில் வரைந்து காட்டியிருக்கிறார். அதுபோல உலகத்தினுடைய சரித்திரத் திருப்பங்களை, அதை ஏற்படுத்திய பெரியவர்களை அவர் வரைந்து காட்டி யிருக்கிறார். ஈழவிடுதலைப் போராட்டத்தைப் பற்றி அவர் கண்காட்சி நடத்தியிருக்கிறார். உலக மனித வரலாற்றில் வெளிப்படக்கூடிய மிக முக்கியமான செய்திகள் எல்லாவற்றையும் அவர் தூரிகை தொட்டிருக்கிறது. அந்த வகையில் இப்பொழுது '**திசைமுகம்**' என்ற தலைப்பில் இந்த நாட்டிற்கு ஒரு விடியலாக வந்த அய்யா பெரியாரைப் பற்றி ஓர் ஓவியக் கண்காட்சியை இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்.

பெரியார் பன்முகத் தோற்றம் - என்பது மிகவும் அருமையான சொல்லாட்சி. பெரியாருக்குப் பன்முக ஆற்றல் உண்டு. அந்தப் பன்முக ஆற்றலைச் சொல்லக் கூடிய வகையிலே இந்த பெயர் அமைந்திருக்கிறது. பல்வேறு துறைகளிலே அவருடைய பணி நடந்திருக்கிறது. '**திசைமுகம்**' என்ற பெயரும் மிகவும் அருமையாக வைத்திருக்கிறார். தமிழனுக்குத் திசைகாட்டியவர் பெரியார். இன்னும் சொல்லப் போனால் தமிழனுக்கு முகம் கொடுத்தவரே அவர்தான். அதனால் திசைமுகம் என்று சொல்கிறபோது அந்த இரண்டுச் சொற்களின் சேர்க்கை பெரியாருடையமுகவரி மாதிரி அமைந்திருக்கிறது. ஆகவே இந்தப் பெயர்களுக்காகவும் நான் ஓவியர் புகழேந்தி அவர்களைப் பாராட்டுகிறேன். இன்னொன்றுக்காகவும் நான் அவரைப் பாராட்டவேண்டும். ஒரு செயல் அது என்னதான் சிறந்ததாக இருந்தாலும், செய்ய வேண்டிய நேரத்தில் செய்யும்பொழுதுதான் அதனுடைய சிறப்பு அதிகமாகும். இந்த நேரத்தில், இந்தக் காலகட்டத்தில் பெரியாரை நினைவு படுத்த வேண்டிய அவசியத்திலே நாம் இருக்கிறோம். அவருடைய கொள்கைகள் மிக வேகமாக மறக்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழினத்தின் மீது பகிரங்கமாகப் போர் தொடங்கியிருப்பதாக நான் கருதுகின்றேன். இந்த இனமும், இந்த மொழியும், இந்தப் பண்பாடும் சரித்திரத்திலே தமிழன் என்றொரு இனம் இருந்தது என்று எழுதிவைக்க வேண்டிய ஓர் அவல நிலைக்கு ஆளாகி விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

எல்லோரும் வேறொரு திசையிலே திரும்பியிருக்கிறார்கள். பெரும்பாலோர் அரசியல் திசையிலே திரும்பியிருக்கிறார்கள். அரசியல் நமக்கு வேண்டும்தான் என்றாலும்கூட என்ன நடக்கிறதோ அதைப் பற்றிய கவலையே இல்லாமல், எல்லோரும் அத்திசையை நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது ரொம்ப ஆபத்தான விஷயம்.

நாம் பண்பாட்டின் பக்கமும், மொழியின் பக்கமும், இனத்தின் பக்கமும் திரும்ப வேண்டிய அவசியம் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. அதற்கு இந்த ஓவியங்கள், செயற்பாடுகள் உதவும் என்று நம்புகின்றேன். தமிழர்களுடைய போதையைத் தெளிவிக்க வேண்டியிருக்கிறது. அவர்களை உறக்கத்திலிருந்து எழுப்ப வேண்டிய அவசியம் இருக்கிறது.

பெரியார் வேறு ஏதேனும் ஒரு நாட்டிலே தோன்றியிருந்தால் அவரை மிகப் பெரிய அளவிலே மதித்திருப்பார்கள். அவருடைய சாபக்கேடு தமிழ்நாட்டிலே தோன்றியிருக்கிறார். ஆனால் எங்கே நோய் இருக்கிறதோ அங்கேதான் மருந்து வரவேண்டும். ஆனால் அந்த மருந்தைச் சாப்பிட்டார்களா என்பது வேறு விசயம். அந்த இயக்கத்தின் பரிணாமமாக வந்த இயக்கங்களெல்லாம் பெரியார் எதைச் சொன்னாரோ, அதற்கு எதிரான விசயங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பெரியாரை நான் ஒரு விசயத்திற்கு மிகவும் பாராட்டுவதுண்டு. எவ்வளவு பெரிய தீர்க்கதரிசியாக இருந்தால், அவர் தேர்தலிலே நிற்கக்கூடாது என்று தன் இயக்கத்தைத் தடுத்திருப்பார். அதை ஒரு கொள்கையாக வைத்திருப்பார். அதை, நான் எண்ணி எண்ணி வியப்பதுண்டு. இன்றைக்குத் தன்மான இயக்கத்தின் வழி வந்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் எல்லாம் எலும்புக்கு வாலாட்டுகிற நாய்களாக மாறிப்போன அவலத்தை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அரசியலுக்கு வந்ததாலேயே வாக்குகள் வாங்கவேண்டும் என்ற விபச்சாரத்திற் காகவே கொள்கைகள், கோட்பாடுகளை விட்டுவிட வேண்டிய ஓர் அவல நிலைமை எழும். இதை அறிந்துதான் பெரியார் அவர்கள் அந்த இடத்திற்குப் போக வேண்டாம் என்று சொன்னார்.

எப்பொழுதும் ஒரு கலாச்சாரப் புரட்சிகர இயக்கமாக, சீர்திருத்த இயக்கமாகவே இருக்க வேண்டும் என்று சொன்னார். இன்றைக்கு அவருடைய கொள்கைகளை எல்லாம் காற்றிலே விட்டுவிட்டார்கள். யாரும் நினைப்பதாகக்கூட எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அது ஆபத்தானது. அந்த கொள்கைகளுக்காக பாடுபடுவது என்பது ஆபத்தான விசயம். இன்றைக்கு எதிரி இனம் மிகவேகமாக இறங்கியிருக்கிறது. வெவ்வேறு துறைகளிலே இதைப்பற்றியெல்லாம் உண்மையிலேயே தமிழினப் பண்பாடு மீது அக்கறையுள்ளவர்கள் ஆழமாகச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மிகவேகமாகத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டிய கட்டாயமும் அவசியமும் நமக்கு நேர்ந்திருக்கிறது. அத்தகைய ஒரு காலகட்டத்தில் ஓவியர் புகழேந்தியின் இந்த ஓவியங்கள் பயன்படும்.

---



வரலாற்று நாயகர்களை ஒவ்வொரு காலத்திலும் தனது தேவைக்கும், ஆற்றலுக்கும் ஏற்றவகையில் நினைவு கொள்வதும், நினைவு படுத்துவதும் அக்கால கட்டத்தின் கலைஞர்களின், படைப்பாளர்களின் கடமை. இக்கடமை தவறும் சமுதாயம் அதன் பலனை அனுபவிக்கிறது. போலிப் புகழ்ச்சிகளை மீறிப் பெரியாரைப் பற்றிச் சுயமாகப் புதிய தலைமுறையைச் சிந்தித்து ஏற்கச் செய்ய தோழர் புகழேந்தியின் ஓவியம் ஓர் தூண்டுகோல். அது காலம் மறவாத கலைப் பணியாக அமையும்

**டாக்டர் வெ.ஜீவானந்தம்**

# ஓவியர் புகழேந்தி
# நம் இனத்துக்குக் கிடைத்த பெரிய செல்வம்

**கி.வீரமணி**

‘**திசைமுகம்**’ என்ற பெயராலே ஓவியர் புகழேந்தி அவர்கள் தொண்டு செய்து பழுத்த பழமான அறிவு ஆசான் தலைவர் தந்தை பெரியார் அவர்களுடைய பல்வேறு பன்முகத் தோற்றங்களை தன்னுடைய தூரிகையின் மூலம் பேச வைத்திருக்கிறார். ஓவியத்தின் மூலமாகவும் காட்டியிருக்கிறார். அதைப் பார்க்கிறபொழுது ஏற்பட்ட உணர்வுகளிலிருந்து உள்ளபடியே அதிலிருந்து நான் மீளமுடியவில்லை.

தந்தை பெரியார் அவர்கள் ஒரு வாழும் தத்துவம். அண்ணா அவர்கள் தந்தை பெரியார் அவர்களைப் பற்றிச் சொல்லும்பொழுது தந்தை பெரியார் அவர்கள் ஒரு திருப்பம்; அவர் ஒரு காலகட்டம்; அவர் ஒரு சகாப்தம் என்று வரலாற்று உண்மையைச் சொன்னார்கள்.

ஒரு தனிமனிதனுக்கு மறைவு உண்டு. ஆனால் தத்துவங்கள் என்பது இறப்பதில்லை. அதுவும் நம்மை வாழவைத்துக் கொண்டிருக்கின்ற, வாழ வைக்கின்ற தத்துவங்களுக்கு எப்பொழுதும் இறப்பில்லை. பல மனிதர்கள் ஏதோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் செத்தாருள் வைக்கப்படும் என்ற அந்த இலக்கணத்திற்கு ஆளானவர்களாகத்தான் இருக்க முடியும். இப்படிப்பட்ட நிலையிலே ஓவியர் புகழேந்தியின் தூரிகை இளைய தலைமுறையினருக்கு அற்புதமான ஒரு சிந்தனைக் கருவியை உருவாக்கித் தந்திருக்கின்றது.

மிகப்பெரிய ஒரு பண்பாட்டுப் போரை நடத்திக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இந்த நாடு எல்லாத் துறைகளிலும் அவலங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், அதை எதிர்த்து நின்று வெற்றி கொள்ளக்கூடிய ஒரு சின்னத்திற்குப் பெயர்தான் தந்தை பெரியார்அவர்கள்.

தந்தை பெரியார் அவர்களுடைய திசைமுகத்தைக் காட்டினால்தான் பல்வேறு திசைகளிலே இருக்கக்கூடிய ஆபத்துக்கள், அறிவுக் கேடுகள், தீய விளைவுகள், நம்மை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற மிகப் பெரிய வெறிகள், பிற்போக்குத்தனங்கள் இவைகள் எல்லாம் வீழ்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

புரட்சிக் கவிஞர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களைப் பற்றி

**தொண்டு செய்த பழுத்த பழம்**
**தூய தாடி மார்பில் விழும்**
**மண்டைச் சுரப்பை உலகு தொழும்**

என்று சொன்னார்கள். இன்றைக்கு உலகம் தொழுது கொண்டிருக்கின்றது.

ஓவியர் புகழேந்தி வரைந்த தந்தை பெரியார் பற்றிய படங்கள் பெரியாரைப் பார்க்காதவர்களுக்கு , பார்க்க வாய்ப்பில்லாதவர்கள் தெரிந்து கொள்ள அவைகள் வெறும் ஓவியங்களாக மட்டுமல்ல தத்துவங்களாக, எழுச்சியின் சின்னங்களாக தன்னுடைய தூரிகையின் மூலமாக ஒரு அற்புதமான பணியைச் செய்திருக்கின்றார்.

‘அய்யிரண்டு திசை முகத்தான்’ என்பதற்கு அடையாளமாக இருப்பவர் அறிவு ஆசான் தந்தை பெரியார் அவர்கள். இதுவரையிலே எட்டு திசை, எட்டுதிசை என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், புரட்சிக் கவிஞர் அவர்கள் மட்டும்தான் ‘அய்யிரண்டு திசைமுகத்தும் தன் புகழை வைத்தோன்’ என்று இராவணனைப் பற்றிஎழுதினார்.

நான் அந்தப்பாடலைப் படித்துவிட்டு புலவர் இராமநாதன் அய்யா அவர்களிடம்

கேட்டேன். புரட்சிக் கவிஞர் அவர்கள் இப்படி 'அய்யிரண்டு திசை முகத்தும் தன் புகழை வைத்தோன்' என்று எழுதியிருக்கின்றார்களே, எட்டுத் திசைகள் என்று தானே சொல்லுகின்றார்களே என்று விளக்கம் கேட்டேன்.

புரட்சிக் கவிஞர் அவர்களுடைய பாடலின் விளக்கம் கேட்கவேண்டுமானால் புலவர் இராமநாதன் அவர்களிடம்தான் கேட்க வேண்டும். அவர்தான் அதற்கு உரியவர். அவர்கள் விளக்கம் சொன்னார்கள். புரட்சிக் கவிஞர் அவர்கள் பகுத்தறிவுச் சிந்தனையோடுதான் எழுதியிருக்கின்றார். எட்டுத் திசைகள் என்பது நமக்குத் தெரியும். ஆனால் புரட்சிக் கவிஞர் அவர்கள் விட்டுப் போன இரண்டு திசைகளையும் சேர்த்தார். அதுதான் மேலும் கீழும். எனவே தான் அய்யிரண்டு திசைமுகத்தோன் என்று புரட்சிக்கவிஞர் பாடினார்கள் என்று எனக்கு விளக்கம் சொன்னார்கள்.

எனவே ஓவியர் புகழேந்தி இதற்கு **'திசைமுகம்'** என்று பெயர் வைத்தது இருக்கிறதே - அது ஓவியத்தை வரைந்ததைவிட இன்னும் சிறப்பான கண்டுபிடிப்பு என்பதைக் காட்டியிருக்கின்றார்கள். அதற்காக மிகுந்த அளவுக்கு நாம் பாராட்ட வேண்டும்.

**ஓவியம் வரைந்தான்**
**அவன் உள்ளத்தினை வரைந்தான்**

என்று எவ்வளவு எளிதான வரிகளிலே புரட்சிக் கவிஞர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். ஓவியர் என்றால் அவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாகச் சொன்னார்.

தசைமுகம், பசைமுகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கக்கூடிய ஓவியர்களும் இருக்கிறார்கள். பெரும்பாலான ஓவியர்கள் பசைமுகம் எங்கே இருக்கிறது என்றுதான் பார்க்கிறார்கள். இல்லாவிட்டால் எங்கே தனக்கு வசை முகம் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறார்கள். அல்லது வருமானம் போய்விடுமோ என்று கவலைப்படுகிறார்கள்.

ஆகவே இந்த நிலைகளிலிருந்து மாறுபட்டு எது வந்தாலும் எனக்குக் கவலை இல்லை என்பதை ஏற்றுத் தந்தை பெரியார் வழியே என் வழி என்பதற்கு அடையாளமாகத் தந்தை பெரியார் அவர்களுடைய படங்களை எல்லாம் ஓவியர் புகழேந்தி அவர்கள் வரைந்திருக்கின்றார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே தன்னுடைய உள்ளத்திலே இருக்கின்ற கொள்கை உணர்வுகளைப் பெரியார் ஓவியத்தின் மூலம் வெளிக் கொணர்ந்திருக்கிறார்கள்.

ஓவியர் புகழேந்தி அவர்கள் தனது நன்றியைக் காட்டி அதன் மூலம் புகழேந்தியதாக இருந்து சாதித்திருக்கிறார். அவரை எவ்வளவோ பாராட்டலாம். ஓவியர் புகழேந்தி அவர்கள் அகில இந்திய அளவில் எவ்வளவோ இன்னல்களைத் தாண்டி , தடைக்கற்களைத் தாண்டி அவர்கள் பெருமை பெற்றிருக்கிறார்கள்.

ஆனால் ஒன்று, இன்னாருடைய அங்கீகாரம் கிடைப்பதில்லையே என்பதைவிட காலத்தை வென்றவர்களுக்கு எப்பொழுதுமே காலம் தாழ்ந்துதான் அங்கீகாரம் கிடைக்கும். ஒரத்த நாட்டுக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய தும்பருத்திக் கோட்டையிலே உள்ள ஒரு கிராமத்தில் ஒரு விவசாயியினுடைய மகனாகப் பிறந்த ஒருவருக்குள் இவ்வளவு பெரிய ஆற்றல் புதைந்திருக்கின்றது.

புகழேந்தி மூலமாக இளைஞர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். இளைஞர்கள் எந்த இடத்திலே பிறந்தார்கள்; எந்தக் குடும்பத்திலே பிறந்தார்கள்; அவர்களுடைய பெற்றோர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதைப் பொறுத்து அவர்களுடைய அறிவோ, ஆற்றலோ அமைவதில்லை.

எல்லோருக்குள்ளும் ஆற்றலும், அறிவும் புதைந்திருக்கிறது. அதை அவரவர்கள்

வெளியே கொண்டு வந்து காட்டவேண்டும். புகழேந்தி அவர்கள் குடந்தையிலே ஓவியக் கல்லூரியிலே தன்னை மாணவராக ஆக்கிக் கொண்டு இன்றைக்குத் தலை சிறந்த ஓவியராக உலகளாவிய நிலையிலே வந்திருக்கின்றார். ஓவியர் புகழேந்தி நம்முடைய இனத்திற்குக் கிடைத்த மாபெரும் செல்வம், சொத்து என்று நாம் சொல்ல வேண்டும். அவரைப் பாராட்டுகின்ற நேரத்திலே எல்லையற்ற மகிழ்ச்சியை நாம் பெறுகிறோம்.

பல நேரங்களிலே எழுத்தாளர்கள் பல நீண்ட கட்டுரையில் கூடச் சொல்ல முடியாத கருத்தைத் தன்னுடைய தூரிகையின் சில கோடுகளாலே சொல்லக் கூடிய ஆற்றல் ஓவியர்களுக்கு உண்டு. எனவே, அந்த ஓவியங்கள் பல புரட்சிகளை, கால மாற்றங்களை, அரசு மாற்றங்களை எத்தனையோ மாற்றங்களைச் செய்யக்கூடிய தன்மை உண்டு.

ஓவியம் என்பது சமுதாய மாற்றத்திற்கான ஒரு கருவியாகப் பயன்பட வேண்டும். அது ஏதோ ஒரு பொழுதுபோக்கிற்காகவோ அல்லது வருமானத்திற்காகவோ இருக்கக் கூடாது.

ஈரோட்டை நோக்கிப் போனவர்கள் யாரும் பாராட்டைப் பற்றிக் கவலைப் படாதவர்கள். உங்களுடைய பணிகளைச் செய்யுங்கள். உங்களுடைய தூரிகைக்கு வண்ணங்களைக் கலந்து கொடுப்பவர்களாக என்றைக்கும் நாங்கள் இருப்போம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்களுக்கு எதிர்ப்புகள் வந்தால் அதற்குக் கருஞ்சட்டைக் குடும்பம் கேடயமாக இருக்கும். உங்களடைய பயணங்கள் தொடரட்டும்! உங்களுடைய இலட்சியங்கள் வெல்லட்டும்!!

உங்களுடைய வாழ்க்கையிலே சாதிக்க வேண்டியவைகள் இன்னும் ஏராளம் உண்டு என்பதை மனதிலே பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

❍ ❍ ❍

அய்யாவின் பன்முகம் ஓவியரின் கைவண்ணத்தில் மெய்சிலிர்க்க வைக்கிறது. ஓவியத்துக்கு வரையப்பட்ட கருத்துப் பட்டயங்கள் நெஞ்சில் நிறைவைத் தருகின்றன. அய்யா மூலம் பெற்ற பல்கலைக் கழகங்களை, இன்று இழந்து வாடும் தமிழக மக்களுக்கு உணர்ச்சியும் எழுச்சியும் பெறத் தூண்ட வைக்கும் இந்த ஓவியங்களும் அதன் அருகே பதிந்துள்ள கருத்து சுருக்கங்களும்.

**செ.சாகுல் அமீது**
**தமிழ் முழக்கம்**



# சசமூகச் சிந்தனை மிக்க ஓவியப் போராளி

பழ. நெடுமாறன்

*எந்த ஓர் இனத்தின் வரலாற்றிலும், அந்த இனத்தின் அடிமைத் தளையை உடைத்தெறிந்து அந்த இனத்திற்கு வழிகாட்டுகிற தலைவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றுகிறார்கள். அத்தகையோர் ஒவ்வொரு துறையிலேதான் அந்த மக்களுக்கு வழிகாட்டியிருப்பார்கள் அல்லது ஓரிரண்டு துறைகளிலே வழிகாட்டிருக்கக்கூடும். ஆனால் நம்முடைய பெரியார் அவர்கள் அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக நம்முடைய மக்களுக்கு, தமிழ் மக்களுக்கு, எல்லாத் துறைகளிலும் வழி காட்டியிருக்கிறார்கள்.*

*அய்ம்பது ஆண்டுகளுக்கு மேலான அவருடைய உழைப்பு, அவருடைய தொண்டு என்பது இன்றைக்குத் தமிழ்ச்சமுதாயத்திலே ஆழமாகப் பதிந்துபோய் இருக்கிறது. அதை யாராலும் மாற்றமுடியாது. இன்னும் பலப்பல ஆண்டுகளுக்கு அந்த முத்திரை அப்படியே இருக்கும். அதை எல்லாம் தெளிவாக உணர்ந்த காரணத்தினால்தான் நம்முடைய நண்பர் ஓவியர் புகழேந்தி அவர்கள் ஓவியக் கலையிலே சிறந்தவராக விளங்கிய போதிலும் அந்த ஓவியத்தை, அவர் திறமையை விற்பனைக்குரிய ஒரு பொருளாக ஆக்கி, அதிலே செல்வம் தேடி, அவர் தன்னை வளப்படுத்திக் கொள்வதை விட , அவருக்குச் சமூக சிந்தனை இருக்கிற காரணத்தினாலே, இன்றைக்கு நன்றியுணர்வோடு பெரியார் அவர்களைப் பற்றி இருபத்தைந்து படங்களை வரைந்து* ***'திசைமுகம்'*** *என்ற தலைப்பின் கீழே வைத்திருக்கிறார். எத்தனை நாட்கள் அவர் உழைத்தார் என்பது அவருக்கு நெருக்கமாக இருக்கக் கூடிய நண்பர்களுக்குத் தெரியும். இந்த உழைப்புக்கு எந்தக் கூலியும் கிடையாது. ஆனால் அவருடைய நன்றியுணர்வை வெளிப்படுத்தியதோடு மட்டுமல்ல, நம்முடைய மக்களுக்கு யாரை மீண்டும் மீண்டும் நினைவு படுத்த வேண்டுமோ, அந்தப் பெரியார் அவர்களை நினைவுபடுத்துகிற வகையிலே திசைமுகம் ஓவியங்கள் வரைந்திருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.*

*பெரியார் அவர்களுக்கு ஓவியக்கலைஞர்களின் சார்பிலே ஓவியர் புகழேந்தி அவருடைய நன்றியறிதலை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த ஓவியங்கள் அச்சிடப்பட்டு எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டும். பெரியார் அவர்களைப் பற்றி எதிர்காலத் தலைமுறை அறிந்து கொள்வதற்கு இவை பயன்படும். ஓவியர் புகழேந்தி செய்திருக்கிற* ***'திசைமுகம்'*** *ஓவியங்கள் இந்தச் சமுதாயத்தை அடியோடு திருத்தி அமைக்கும் பணிக்கு நிச்சயமாக உதவும். பெரியார் அவர்கள் செய்த அந்தத் தொண்டினை அவருடைய சித்திரங்கள் தொடர்ந்து செய்யும் என்ற நம்பிக்கையை இந்த ஓவியக் கண்காட்சி ஏற்படுத்தியிருக்கிறது. நண்பர் புகழேந்தி அவர்கள் இதற்கு முன்னாலேயே பல ஓவியக் கண்காட்சிகளை நடத்தி இருக்கிறார்கள். நாமெல்லாம் பார்த்து மகிழ்ந்து இருக்கிறோம். உலக நாடுகளில் உள்ள மற்ற தமிழர்களும் பார்த்து மகிழ்ந்து இருக்கிறார்கள். அந்த சிறப்புக்குரிய ஒருவர் அவருடைய திறமையையெல்லாம் சமூகச் சிந்தனையோடு இங்கே அவர் பயன்படுத்துவதற்காக நாமெல்லாம் அவருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.*



**காசி. ஆனந்தன்**

ஓவியர்கள் அல்லது கவிஞர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் நிலவைத்தான் பார்ப்பார்கள், பூக்களைத்தான் பார்ப்பார்கள் என்று ஒரு காலம் இருந்தது. அவற்றில் அவர்கள் ஒன்றுகிறபோது ஓவியம் பிறந்தது, இலக்கியம் பிறந்தது. எப்படி பெரியாருடைய முகங்கள் ஓவியர் புகழேந்திக்குத் தெரிகின்றன என்றால், அவர் எப்பொழுதுமே போராட்ட உணர்வுகளோடு , காலமுழுவதும் அந்த உணர்வுகளையே தன்னுடைய ஓவியங்களாக்கி வருகிறவர் என்பது ஒருபுறமிருக்க, ஓவியர் புகழேந்தியினுடைய நிலை இந்த ஓவியங்களை வரைகின்ற அந்தக் காலச் சூழலில் அவர் இந்த மண்ணைப் பலவிதமான எண்ணங்களோடு , இந்த மண்ணைப் பார்த்து வெந்து, வெம்மி, நொந்து, நொடிந்து பார்க்கிற பொழுதெல்லாம் ஓவியர் புகழேந்திக்குப் பெரியார் முகந்தான் தெரிந்திருக்கிறது. ஏனோ தெரியவில்லை. பெரியார் தேவை போல, பெரியாரைத் தவிர வேறு எதையும் பார்க்கமுடியாத காலம் போல பெரியாரைக் கொண்டுதான் இந்த மண்ணை நிமிர்த்தலாம் என்ற எண்ணம் அவர் நெஞ்சிலே தோன்றியதைப்போல அவர் பெரியார் முகங்களையே வரைந்து தள்ளியிருக்கிறார். '**திசைமுகம்**' என்று தலைப்புக் கொடுத்திருக்கிறார். கிழக்குத் திசையா , மேற்குத் திசையா, தெற்குத் திசையா அல்லது வடக்குத் திசையா என்றால் என்னைப் பொருத்தவரை நான் உறுதியாகச் சொல்லுவேன், பெரியார் பார்த்த திசை, குனிந்து பார்த்த திசை, நாலு பக்கமும் பார்க்காமல் அண்ணாந்து கூடப் பார்க்காமல் இந்த மண்ணைத் தான் பார்த்தார். பெரியார் பார்த்த திசை மண்நோக்கிய திசை. இதைப் புரிந்து கொண்டால் பெரியாரைப் புரிந்து கொண்டவர்களாக இருப்போம் என்று நான் நினைக்கிறேன். ஓவியர் புகழேந்தியினுடைய உள்ளம், நொந்து, நொடிந்து இந்த நேரத்தில் மிக உடனடித் தேவையாகக் கருதுகிற, பெரியாரை எண்ணி அந்த முகத்தை மனதில் கொண்டு, அவர் வரைந்த ஓவியங்களை நாம் பார்க்கிறோம். அவர் கோடுகளால் அந்த ஓவியங்களை வரைந்திருக்கிறார். பெரியாரை வரைவதற்கு வண்ணங்களைவிட , கோடுகளால் வரைவதே சிறப்பாக இருக்கிறது. அந்தக் கோடுகளைப் பார்க்கிறபோது அவருடைய ஓவிய ஆற்றல் நமக்குத் தெரிகிறது. அந்த கோடுகளில் அத்தனை உணர்வுகளையும் அள்ளிக் கொட்டியிருக்கிறார். இந்த மண்ணுக்கு ஓவியங்கள் நமக்கு கிடைத்திருக்கின்றன. மேலை நாடுகளில் எல்லாம் ஓவியக் கலையை வைத்து ஓவியன் தன்னை வளர்க்கிறான். ஆனால் நமது நாட்டில் தன்னை வைத்துப் புகழேந்தி ஓவியக்கலையை வளர்த்துக் கொண்டிருக்கிறார். இது மிகப் பெரிய பணி.

**பெ.மணியரசன்**

புகழேந்தியைப் பொறுத்தவரை பால்மணம் மாறாத பாலகன் என்பார்கள். அப்படிப் பால்மணம் மாறாத இளைஞராக, அவரே ஓர் ஓவியமாக எங்கள் பகுதியில் அறிமுகமானார். இயல்பாகவே அவருக்கு ஓவியத்தின் மீது பெரிய நாட்டம் இருந்த காரணத்தால் பள்ளிப் படிப்பின் போதே சுயமுயற்சியால் ஓவியங்கள் தீட்டிப் பெயர் பெற்றுப் பின்னர் பரிசுகளும் பெற்றார். இப்பொழுது அவர் தந்தை பெரியார் அவர்களுடைய பன்முகத் தன்மையை ஓவியங்களாக்கி இருக்கிறார். ஏற்கனவே பல சமூக நோக்கங்களுக்காக ஓவியக் கண்காட்சிகள் நடத்திப் புகழ் பெற்றவர். பல வடிவங்களில் தந்தை பெரியார் அவர்களை மிகச் சிறப்பாக எழுச்சியாகக் கொடுத்திருக்கிறார். இந்த ஓவியங்கள் நம்முடைய பள்ளிப் பிள்ளைகளுக்கு மாணவர்களுக்குப் போய்ச்சேர வேண்டும். ஏனென்றால் நம்முடைய அடையாளங்கள் இசையாகட்டும், நாட்டியமாகட்டும், ஓவிய மாகட்டும், அவை எல்லாம் மறுக்கப்பட்டு வடநாட்டு அடையாளங்கள் திணிக்கப் பட்டிருக்கின்றன. பகவத் கீதை காட்சிகளும், மகாபாரதக் காட்சிகளும் தமிழனுக்கு அன்னியப்பட்ட, தமிழனை இழிவு படுத்துகின்ற அந்த காவியங்களுடைய காட்சிகளும்தான் சனரஞ்சகமாக நாட்டிலே பரப்பப் பட்டிருக்கின்றன. நம்முடைய தலைவர்கள், நம்முடைய சங்க காலக் காட்சிகள் இருப்பதில்லை. இந்தப் பெரியாருடைய படிமங்கள் இளைஞர்களுடைய நெஞ்சிலே பதிய வேண்டும். குழந்தைகள் நெஞ்சிலே பதிய வேண்டும். புகழேந்தியின் பெரியார் படமும், திருக்குறள் புத்தகமும் ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்க வேண்டும்.

**தியாகு**

கலைகலைக்காகவே என்ற கண்ணோட்டத்தில் , ஓவியம் ஓவியத்திற்காகவே என்ற பார்வை கொண்ட, ஓவியர் ஒருவரின் ஓவியக் கண்காட்சியாக இருக்குமானால், ஏதோ வந்து பார்த்து விட்டுப் போகலாம். கருத்துச் சொல்வதற்கு ஒன்றுமிருக்காது. கலை மக்களுக்காக என்ற முறையில், தன் ஓவியங்களை மக்களுக்காக வரைகிற ஒரு மக்கள் ஓவியரின் ஓவியங்கள், அதிலும் தந்தை பெரியார் அவர்களின் முகத்தை பல கோணங்களில், பல பரிமாணங்களில், பல உணர்ச்சிகளில் வெளிப்பாடுகளில் தீட்டிக் காட்டுகிற ஓவியங்களின் காட்சி என்ற முறையில் ஓவியம் ஆயினும், காவியமாயினும், வேறு கலைகளாயினும், அவை தனிமனித மூளை ஆற்றல்களின் வெளிப்பாடு அல்ல. தனிமனித ஆற்றல்களுக்கு இந்தக் கலை வடிவங்களின் செழுமையில், சிறப்பில் ஒரு பங்குண்டு.ஆனால் குறிப்பிட்ட வரலாற்றுப் பகைப்புலங்கள்தான் கலைகளின் சிறப்புக்குச் சான்றுகளாகின்றன. அய்ரோப்பிய மறுமலர்ச்சிக் காலந்தான் மேலைஉலகின் தலைசிறந்த ஓவியங்களைத் தந்தது. தலைசிறந்த காவியங்கள் அப்பொழுதுதான் படைக்கப்பட்டன. எல்லா நம்பிக்கைகளும் கேள்விக்குள்ளாக்கப்பட்டு, எல்லாவிதமான சமூக நிறுவனங்களும் குலுக்கி எடுக்கப்பட்ட ஒரு காலம். அந்த மறுமலர்ச்சிக் காலம் பற்றி நான் முன்பொருமுறை எழுதுகிறபோது எழுதினேன், 'பகைப்புலம் ஒரு புயற்காலம்' என்று! அப்படி ஒரு புயற்காலம்தான் லியனார்டோ டாவின்சியைத் தந்தது. அந்த புயற்காலம்தான் எக்டேயைத் தந்தது. அந்தப் புயற்காலம்தான் தாந்தேயைத் தந்தது. நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தில் தொன்மைச் சிறப்புக்கு மிகச் சிறந்த சான்றுகளாக விளங்குகிறவை, தொன்மைத் தமிழ்ச் சமூகத்தினுடைய கலைப்படைப்புகள், இலக்கியப் படைப்புகள். எத்தகைய ஒரு சமூகம், எத்தகைய ஒரு சமூக அமைப்பு, எத்தகைய ஒரு சமூக ஒழுங்கு, மனிதர்களிடையே எத்தகைய உறவுகளை நிறுவிய ஒரு சமூக ஒழுங்கு இத்தகைய இலக்கியங்களைப் படைத்திருக்க முடியும், என்பது ஒன்றே தமிழ்ச் சமூகத்தின் தொன்மைக்கு மிகச்சிறந்த சான்று. இன்று புகழேந்தியைப் போல, வீர சந்தானத்தைப்போல, ட்ராட்ஸ்கி மருதுவைப் போல, சமூக பிரக்ஞை கொண்ட ஓவியர்கள்

தங்களது ஓவியங்களை மக்களுக்காக, மக்கள் இயக்கங்களுக்காகத் தெரிந்து உணர்வுபூர்வமாக வரையக்கூடிய ஓவியர்கள், நம்மிடையே வந்திருக்கிறார்கள் என்றால் தந்தை பெரியார் அவர்கள் தமிழ்ச் சமூகத்தில் காணவிரும்பிய மறுமலர்ச்சி காலத்தின் தொடக்க நிலையில் நாம் இருக்கிறோம் என்பதற்கான ஓர் அறிகுறிதான். தமிழ்த் தேசிய எழுச்சியின் முன் அந்திப் பொழுதிலே நாம் வாழ்கிறோம் என்பதைப் புகழேந்தியின் ஓவியங்கள் காட்டுகின்றன.

இந்த ஓவியங்களில் தந்தை பெரியாரை மட்டும் பல்வேறு தோற்றங்களில் வரைந்து காட்டியிருக்கிறார். நம்முடைய மக்களுக்குப் பெரியாரை அறிந்திராத, பார்த்திராத எதிர்காலத் தலைமுறையினருக்குப் பெரியாரின் எழுத்துக்கள், பெரியாரின் கருத்துக்கள் இவை மட்டும் போதுமானது அல்ல, இந்தக் கருத்துக்களைத் தந்த அந்த உருவம், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியது போல, தூயதாடி மார்பில் விழுகிற அந்தத் தோற்றம், தொண்டு செய்து பழுத்த பழமான அந்தத் தோற்றம் தெரிந்த பிறகுதான் மண்டைசுரப்பைத் தொழுகிற உலகாக நமது உலகு இருக்கும். அப்போது மனக் குகையில் சிறுத்தை எழும்.

முதலில் உருவம் வேண்டும். இரத்தமும் சதையுமாக அவர்கள் அறிமுகமாக வேண்டும், உருவம் தெரிய வேண்டும். உருவம்தான் அந்தக் கருத்துக்களைப் பதிய வைப்பதற்கு, அந்தக் கருத்துக்கள் பக்கம் கவனத்தைத் திருப்புவதற்கு இன்றியமையாதது.

மனிதனை இயற்கையிலிருந்து வேறுபடுத்துவது அவனுடைய சமூக வாழ்க்கையும், அழகுணர்ச்சியும்தான். அந்த அழகுணர்ச்சியின் ஒரு வெளிப்பாடு கவிதை, மற்றொரு வெளிப்பாடு ஓவியம். கவிதை படிப்பதற்குக் கவிதை எழுதுகிற அளவுக்குத் தேவைப்படுகிற அந்தக் கவித்துவ ஆற்றல் தேவைப்படாது. ஆனால் கவிஞனின் கால்வாசி இருந்தால்தான் கவிதையைப் புரிந்து கொள்ளமுடியும். ஓவியக் கலையில்தான் நுட்பங்களுக்குள் போகவேண்டாம். பார்த்தவுடன் நன்றாக இருக்கிறது, அழகாக இருக்கிறது என்று இரசிப்பதற்கு அதுதான் ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறது. ஓவியர் புகழேந்தியினுடைய பன்முகத் தோற்றம் என்பது நிறைவு பெற்ற பெரியாரின் பன்முகத் தோற்றம், முழுமை பெற்ற பெரியாரின் பன்முகத் தோற்றம்.

**— அருள்மொழி**

கலை சார்ந்த, திறமை சார்ந்த வெளிப்பாடு என்பதைவிட ஓர் உணர்வு பூர்வமான வெளிப்பாடு என்பதுதான் உண்மை. அய்யா என்கிற ஒரு மாமனிதரை , ஒரு போராளியாக, தமிழினத்தின் தந்தையாக, சீர்திருத்தவாதியாக, பகுத்தறிவுச் சிந்தனைகளைத் தோற்றுவித்து, அதற்காகப் போராடிய இயக்கத்தைக் கண்ட ஒரு தலைவராக, எத்தனை பரிமாணங்களைக் கொடுத்தாலும் அதை எல்லாம் தாண்டி அதற்கு மேல், நம் உணர்வோடு கலந்து நிற்கிறார். இந்தத் தமிழினத்தின் தலை முறைகள் வாழும் வரையும் பெரியார் என்கிற பெயர் தான் நமக்கு அடையாளமாக இருக்கும். இது நமது உணர்வு. நாம் அறிந்த கலைகளில் கலை வடிவங்களில் அய்யாவை வெளிப்படுத்தவது என்பது ஒவ்வொரு கலைஞனின் வாழ்நாள் கனவு.

கவர்ச்சியான தோற்றத்தை ஓவியர் புகழேந்தி அவர்கள், முழுக்க முழுக்க , முதுமையில், சற்றே தலையைச் சாய்த்து, சிந்தித்து கண்களைச் சுருக்கி, விரித்து,, கண்ணாடி போட்டு, கண்ணாடி இல்லாமல் ஒவ்வொரு திசையிலும் பார்க்கிற ஒரு தொடர்ச்சியான ஒரு நிகழ்வை நாம் பார்ப்பது போல ஒவ்வொரு உணர்வோடும் உள்ளத்தில் நம்மோடு பழகுவதைப்போல அந்த முகத்தோற்றத்தைப் பலவிதமாக ஒரே பருவத் தோற்றத்தை வரைந்திருக்கிறார்கள்.

தொண்டுசெய்து பழுத்த பழத்தை, தூயதாடி மார்பில் விழும் அந்தத் தோற்றத்தை, மனக்குகையில் சிறுத்தை எழும் என்கிற அந்த வரிகளில் கனிந்த அந்த முகம், அந்த முகத்திற்குள்ளிருந்து அவர் வரைந்திருக்கிற தாடியும், தலைமுடியும், உள்ளிருந்து கிளம்பும் தீ கங்குகளைப் போலவே, முழு ஓவியத்திலும் வெளிப்படுகிறது.



**சுப. வீரபாண்டியன்**

பல கோணங்களில் தந்தை பெரியாருடைய படம் வரையப்பட்டிருந்தாலும் எல்லாப் படங்களிலும், எல்லாக் கோணங்களிலும், ஒன்று தெளிவாகத் தெரிகிறது. ஆழ்ந்த கவலை மிகுந்த , சமூக அக்கறை கொண்ட அவருடைய முகந்தான் எந்தக் கோணத்தில் பார்த்தாலும் தெரிகிறது. நேரடியாகப் பார்த்தாலும், சாய்வு நோக்கிலே பார்த்தாலும், எப்படிப் பார்த்தாலும் ஒரு தாய்க்குத் தன் குழந்தையைப் பற்றி இருக்கிற கவலையும் , அக்கறையும் போல இந்தச் சமூகத்தைப் பற்றி அவர் கொண்டிருந்த கவலையும் அக்கறையும் அவருடைய எல்லா முகங்களிலும், கோணங்களிலும் தெரிகிறது.

புகைப்படத்திற்கு ஏற்ற முகம் , உருவம் அவருடையது என்று சொல்லுவார்கள். ஓவியத்திற்கும் ஏற்ற முகம், உருவம் அவருடையது என்பதைப் புகழேந்தியின் ஓவியங்கள் மெய்ப்பித்திருக்கின்றன. புகழேந்தியின் ஓவியங்களில் , அவர் வரைந்திருக்கின்ற கோடுகளில் எல்லாம், நான் என்ன பார்க்கிறேன் என்றால், அவர் வேறு எத்தனை படங்களை வேண்டுமானாலும் வரைந்திருக்கலாம். புகழேந்தியைப் போல புகழ் பெற்ற பல ஓவியர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் அரசனை வரைந்தவர்கள், கடவுள்களை வரைந்தவர்கள், அழகான பெண்களை வரைந்தவர்கள். உங்களுக்கு வரையத் தோன்றியதே அய்யாவை 25 கோணங்களில். அதைப் பார்க்கிறபோது நான் பெருமைப்படுகிறேன். உங்கள் ஓவியக் கோடுகளில் நன்றி உணர்ச்சியைப் பார்க்கிறேன்.அந்தக் கோடுகளிலே .. மறுபடியும் எங்களை மாடுமேய்க்கப் போகாமல் இருக்கச் செய்தவன் நீதான் என்று ஒரு கோடு, நீதான் எங்களை படிக்க வைத்தாய், வெறும் தார்குச்சி வைத்திருந்த கைகளில் தூரிகைக் கோலைத் திணித்தவன் நீதான் என்று இன்னொரு கோடு. எனவே அவருடைய ஒவ்வொரு படத்திலும் , ஒவ்வொரு முகத்திலும் நம்முடைய நன்றியுணர்ச்சியை நம்முடைய அனைவர் சார்பாகவும் ஓவியர் புகழேந்தி வெளிப்படுத்தியிருக்கிறார். நம் இனத்தில் நமக்காக வாழ்ந்த ஒருவருக்கான படங்களை புகழேந்தி பதிவு செய்திருக்கிறார். கடைசி வரையில் ஊர்ஊராகப் போய், மக்களிடத்திலே பகுத்தறிவுக் கருத்துக்களைச் சொல்லி, தன்னைக் கரைத்துக் கொண்டு இந்தச் சமூகத்திற்கு வெளிச்சம் காட்டிய ஒரு மாமனிதன் தான் தந்தை பெரியார். அவரை இத்தனைக் கோணங்களில் இத்தனை அழகாய் , ஓர் உயிரோவியமாய்த் தீட்டியிருக்கிற புகழேந்திக்குத் தமிழினம் என்றென்றைக்கும் நன்றிக்கடன் பட்டிருக்கிறது.



## ஓவியர் வீர சந்தானம்

*நான் உள்ளே நுழைஞ்சொன்ன , புகழேந்தியைக் கேட்டேன். எத்தனை ஓவியர்கள் வந்தார்கள் என்று, இரண்டு மூன்றுபேர்தாண்ணே வந்தாங்கன்னாரு. அப்பவே நினைச்சுகிட்டேன். இந்தக் கண்காட்சி சிறப்பாக நடந்திருக்குன்னு. நான் புகழேந்தியோடு ஒவ்வொரு கண்காட்சிக்கும் வந்திருக்கேன். பாராட்டியிருக்கேன். ஏன்னா செய்யிறது எல்லாம் பெரிய விசயமா இருக்கு. உன்னைப் பார்த்தா சாதாரண, அழகான ஒரு பையனா தெரிகிறீய, உன் உள்ளேயிருந்து இவ்வளவு பெரிய விசயங்கள் எல்லாம் வந்துகிட்டிருக்கே என்று மட்டும் சொல்லிட்டு போவேன். இப்போ அய்யாவைப் பற்றி கருப்பு வெள்ளையிலே இந்த ஓவியத்தைப் படைச்சிருக்காரு. கருப்பு ஆழமானது, உள்நோக்கிப் போகக் கூடியது. வெள்ளை வெளிப்படையானது. இதை வண்ணத்தில் கொடுத்திருந்தால்கூட இதன் அர்த்தங்களெல்லாம் கூட நிறைய மாறியிருக்கலாம். ஆனா இதுல நேரடியாகவே இருக்கு. ஒரு காலத்துல மேலை நாட்டுல மகராஜாக்களையும் தளபதிகளையும் , அழகிய பெண்களையும், போர்ட்ரைட் என்று சொல்ற அறை உருவமா வரையிறது, இரசியாவில இதபோல கம்யூனிச தலைவர்களையெல்லாம் வரைஞ்சிருக்காங்க. நான்கூட, மருது கூட பெரியாரை வரைஞ்சிருக்கோம். பெரியாரை பெயிண்டில் பண்ணி அய்யாகிட்டவே கொடுத்து கட்டித் தழுவினவன். அதனால இதை பார்க்கிறதுக்கு நான் கொடுத்து வச்சிருக்கேன். அப்படின்னுதான் சொல்லணும். ஆனால் அதிலிருந்து மாறுபட்டு இந்த ஒரு தலைவருக்காக இப்படி ஒரு அரைஉருவ கண்காட்சி பண்ணுனது புகழேந்திதான். கூர்மையாக அந்த ஓவியத்தை நீங்கள் தொடர்ந்து பார்க்க முயற்சி பண்ணீனிங்கன்னா அது நிறைய பல கருத்துக்களை வெளிப்படுத்தும். நீங்கள் எவ்வளவு கற்பனை பண்றீங்களோ அந்த அளவுக்கு விரிவடைஞ்சுக்கிட்டே போகும்.கருப்பு வெள்ளைக்கு அவ்வளவு பெரிய சக்தி உண்டு. அதுவும் வரைஞ்சிருக்கிறது பெரியார் பற்றிங்கிறதானல, அதன் அர்த்தம் இன்னும் கூடுதலாகக் கிடைக்கும். பெரியார் பற்றிய விசயங்களை எல்லாம் புகழேந்தி ஓவியத்தில் கொண்டு வரணும். என்னால செய்ய முடியல. உனக்குத் திறமை இருக்கு. எல்லாத்தையும் ஓவியமாக்கணும். குறியீடாகவும் செய்யணும். எல்லோரும் சேர்ந்து இந்த ஓவியங்களை உலகம் பூராவும் கொண்டு செல்லணும்.*

உண்மை, சத்தியம், வாய்மை, நேர்மை என்பதே மனிதகுலத்தின் நேரான இலட்சியம், வாழ்க்கை லட்சியம் என்பதை டார்வின் சொல்ல ஆரம்பித்தபோது, அதைத் தொடர்ந்து நின்று தமிழகத்திலும் அதைக் கட்டிக் காத்து அதை மேலோங்கச் செய்து, அதை மக்களை அடையச் செய்தவர் பெரியார்தான். நான் எனது தோளில் துண்டைப் போட்டுக் கொண்டிருக்கிறேன் என்றால், என்னைப் போல ஏராளமான பேர் தோளில் துண்டையும், காலில் செருப்பையும் போடுகிறார்கள் என்று சொன்னால், சத்தியமாக உண்மைக் காரணம் பெரியார் - பெரியார்-பெரியார். காலங்கள் எத்தனை ஓடினாலும், எத்தனை நூற்றாண்டுகளை நாங்கள் கடந்தாலும் பெரியாரை மறந்து நாங்கள் வாழமுடியாது. ஆகவே ஏதோ ஒரு வடிவத்தில் , இலக்கிய வடிவத்தில், சிற்ப வடிவத்தில், ஓவிய வடிவத்தில் காலங்காலமாக அவர் ஞாபகத்தில் இருந்து கொண்டே இருப்பார்.

கடவுள்களை வரைந்தும், காட்சிகளை வரைந்தும் வர்த்தகத்தையே அடிப்படை நோக்கமாகக் கொண்டு அனைத்தும் நடைபெறும் இந்தக் காலகட்டத்தில்கூட தன் பொன்னான நேரத்தையும், தன் மனைவி மக்களுக்குச் சேர்த்து வைக்கவேண்டிய பணத்தையும், தனது இளமைக் காலத்தையும், தான் சார்ந்திருக்கும் மண்ணுக்கும், மக்களுக்கும் ஓவியர் புகழேந்தி எந்த அளவு தியாகம் செய்திருக்கிறார் என்பது நான் கண்கூடாகப் பார்த்தது. ஆம்; பல லட்சம் மதிப்புடைய ஓவியங்கள் மூலம் புலம் பெயர்ந்த மக்களின் சோகக் கதைகளை அவர் சித்திரங்களாக வரைந்திருக்கிறார். ஈழமண்ணில் நடைபெறும் இரக்கமற்ற அராசகங்களை அவர் வரைந்திருக்கிறார். அந்த ஓவியங்களை எடுத்துக்கொண்டு கடல் கடந்து போய் கண்காட்சி வைத்து, மக்களின் விடுதலைக்காக ஒரு பேச்சாளன் என்ன செய்ய முடியும், அவை அனைத்திலும் மேலாக சித்திரங்கள் மூலமாகவே உணர்ச்சிகளையும், வேட்கைகளையும் உருவாக்கிய மனித இதயம் கொண்ட ஓர் ஓவியன் புகழேந்தி. பல இலட்சம் விலைபெறும் அந்த ஓவியங்களைக்கூட அந்த மக்களுக்குத் தானமாகக் கொடுத்துவிட்டு, இந்த ஓவியங்களை விற்று உங்கள் விடுதலைக்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று தியாகம் செய்துவிட்டு வந்தவர் ஓவியர் புகழேந்தி. அவரது பணி அதோடு நின்று விடாது, அந்த மக்களின் நலன் கருதி, அவரது பயனுள்ள ஓவியங்கள், கடல் கடந்த நாடுகளிலும், நாடுகள் கடந்தும் கண்காட்சிகளில் இடம் பெறும்.மக்களுக்கு நலம் பயக்கும்.



பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் கருத்துக்களை , அறிஞர் அண்ணா அவர்கள் பேச்சாலும் , எழுத்தாலும் பரப்பினார்; புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பெரியாரின் கருத்துக்களைக் கவிதைகள் மூலம் பரப்பினார்.

ஓவியர் கு.புகழேந்தியோ, பெரியாரின் கருத்துக்களை ஓவியங்கள் மூலம் பரப்பி வருகிறார்! மேற்கண்ட இருவரையும் விடப் புகழேந்தியின் சிறப்பு என்னவென்றால், தந்தை பெரியாரை புகழேந்தி கண்ணால் கூடப் பார்த்ததில்லை!

புகழேந்தியின் புகழ், இந்திய எல்லைகளைக் கடந்து உலகமெலாம் பரவும் காலம் வரும்! வரும்!

**-முகம் மாமணி**

## சூரியத் தூரிகை

தமிழ்நாடன்

சூரியன் ஒளி தருவோன்
சூரியனுக்கு நம் பூமியும் ஓர் ஓவியத்திரை

சூரியத் தூரிகையே
தாவரங்களுக்குப் பசுமை பூசுகிறது

பூமி நடுக்கோட்டு மக்களுக்கு
கறுப்பு வண்ணம் தீட்டுவது அதுவே

இமய நுனியும் துருவப் பகுதிகளும்
வெண்மையாக இருப்பதன் காரணம் சூரியனே

சூரியன் ஒளி தருவோன்
ஒளியே ஓவியம்.

★

பெரியார் தொடங்கிய பண்பாட்டு யுத்தம்
இன்னும் முடிவுக்கு வரவில்லை

உலகமயமாதல் எல்லாப் பண்பாடுகளையும்
எடுத்து விழுங்குகிறது

ஆரியம், ஏகாதிபத்தியம், பன்னாட்டியம்
எல்லாம் அதன் அழிவாற்றலின் முன் துரும்பு

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு
தனித்தனி அழிவுக் கருவி

இப்போது ஒலி-ஒளி ஊடகம்
இணையம் எல்லா வகையான
ஏவுதலையும் முடிக்கும்
இந்நிலையில் முன்னிலும் நமக்குப்
பண்பாட்டு நெருக்கடி

உடன்பிறந்த அண்ணனும் தங்கையுமே
அணி மாறி, எதிரிகளின் குரலில்
நம்மை ஏசிக் கொண்டு
நம் இல்லத்திலிருந்தே

★

தமிழர் வரலாற்றில்
ஒரு பெரும் சூரியன்
பெரியார் என்னும் பெயரியது.
இரண்டாயிரம் ஆண்டுக் காலமாய்
தமிழர் வாழ்வில் படிந்த கறுமையை அழித்து



வெண்மை ஒளியேற்றி பசுமை படர விடுவது
அச் சூரிய இலட்சியம்

★

ஒவ்வொரு பண்பாட்டிலும்
ஒரு பெரும் பெரியார்
மக்கள் அவரை வரலாற்றுப்படுத்துவர்
கவிஞர் இலக்கியப் படுத்துவர்
ஓவியர் கலைவடிவமாக்குவர்
கலை இலக்கிய வடிவமே , ஒரு தலைவரை
அடுத்த அடுத்தத் தலைமுறைக்கு
தந்தையாய் பாட்டனாய்
அறிமுகப்படுத்துபவை

★

புகழ் என்று புகழ்பெற்ற ஓவியர்
புகழேந்தி.
தமிழ்ச்சூரியனை நாளையத் தமிழருக்கு
அறிமுகப்படுத்தும் கலைஞன்.
தமிழ் கலை இலக்கியச் சூழலில்
தமிழை, தமிழரை, தமிழ்நாட்டை மறந்த
படைப்பாளிகளே மிகு சதம்.
புகழின் ஓவியங்கள்
தமிழ் பேசுகின்றன.
புலம் பெயர்ந்தத் தமிழனுக்காகப்
புலம்புகின்றன.
ஈழத் தமிழர் போராட்டத்தில்
தானும் ஓர் ஆயுதமாக
அணி சார்கின்றன.

★

இந்தத் **திசைமுகம்** ஓவியத் தொகுதி
பெரியாரைக் கண்ட , கேட்ட
தமிழருக்காக அல்ல.

பெரியாரைக் காணாத
பெரியார் எனும் பெயரைக் கேளாத
நாளையத் தமிழனுக்காக!
நம் பிள்ளைகளுக்காக!

பெரியாரின் நெஞ்சநெருப்பு
புகழேந்தியின் தூரிகையில் கொஞ்சம்

அது என்றும் ஒளிவிடட்டும்
நின்று எரியட்டும்





ஞாநி

ஒன்றும் செய்ய முடியாமல் முடங்கி கிடந்த ஒரு சமூகத்தை, தானும் மனிதர்கள் என்கிற அடிப்படை உணர்வை, தமிழகத்திலே ஊட்டிய தலையாய சிந்தனையாளர் பெரியார். கடந்த கால வரலாறு நிரூபித்த வரலாறை, எதிர்கால வரலாற்றில் யாராலும் அழிக்க முடியாத வரலாற்றை வரைந்துள்ளார் புகழேந்தி. இந்தப் பங்களிப்பைச் செய்த பெரியாரை, தமிழ்க் குழந்தைகள், தமிழ்ச்சிறுவர்கள் அத்தனை பேரும் எத்தனையெத்தனை விதமாக, தங்கள் தாத்தாவை, தங்கள் பாட்டனை நினைத்துப் பார்க்க முடியும் என்பதற்கு, அந்த கற்பனைக்கு, ஒரு எல்லையோ வரையறையோ கிடையவே கிடையாது. இன்றைக்கு ஒரு பேரக் குழந்தை புகழேந்தி தன்னுடைய பாணியிலே, அந்தத் தாத்தாவுக்கு, பாட்டனுக்கு தன்னுடைய நன்றியறிதலை தெரிவிக்கும் முகமாகத்தான் இந்த ஓவியங்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. தமிழ்ச் சமூகத்திற்கே தந்தையாக இருக்கக்கூடிய பெரியாரை நினைவு கூர்வது, தலைமுறை தலைமுறையாக ஒவ்வொரு வகையிலும் செய்ய வேண்டிய பணியாக இருக்கிறது. அதில் ஒரு வகைப் பணியாகத்தான் புகழேந்தி என்கிற ஓவியக் குழந்தை தன்னுடைய பங்களிப்பைச் செய்திருப்பதாகப் பார்க்கிறேன். இன்றைக்குப் புகழேந்தி வரைந்திருக்கக் கூடிய பெரியார் ஓவியங்கள் அனைத்தையும், ஏராளமான பிரதிகள் அச்சிட்டு ஒவ்வொருவிழாவிலும், குழந்தைகளுக்கு வழங்க வேண்டும். இன்றைக்கு ஒரு தலைமுறையே சமூகத்தின் வரலாறு தெரியாமலே வளரக்கூடிய சிக்கலில் நாம் இருக்கிறோம். தொடர்ந்து பல தலைமுறைகளுக்கு, பெரியாரை, வரலாற்றை இன்றைய சூழ்நிலையில் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது. இப்படி நினைவுபடுத்துகிற பணியின் ஓர்அடையாளமாக, அதற்குப் பங்களிப்பாக ஒவ்வொரு பள்ளிக்கூடநிகழ்ச்சியிலும், குழந்தைகளுக்குப் பரிசாகத் தருவதற்குப் புகழேந்தியினுடைய பெரியார் ஓவியங்களை எல்லாம் பரிசுப் பொருள்களாக மாற்ற வேண்டும்.இதில் இரண்டு விசயங்கள் கலந்திருக்கின்றன. ஒன்று நல்ல ஓவியங்கள், அவை பற்றிய இரசனையை நாம் சேர்த்து வளர்க்கிறோம். இந்த ஓவியங்கள் சொல்லுகிற மனிதர்கள் எப்படிப்பட்ட சிறந்த மனிதர்கள் என்கிற ஒரு வரலாற்றுப் பார்வையையும் வளர்க்கிறோம். இந்த இரண்டையும் சேர்த்து வளர்ப்பதற்குப் புகழேந்தியின் பெரியார் ஓவியங்கள் வீடுதோறும் சுவரில் மாட்டுகிற சித்திரங்களாக மட்டுமல்லாமல், ஒவ்வொரு குழந்தைக்கும் நாம் அடுத்த தலைமுறைக்கு ஒப்படைத்து விட்டு போகிற ஓர் அறிவுச் செல்வமாகவும் இருக்கும்.

# அடடா, எத்தகையதொரு பட்டறிவு!

*உண்மை ( 1-15 மார்ச் 2002 )* **பெரியார் மாணாக்கன்**

*அடடா, அது எத்தகையதொரு பட்டறிவு! உள்ளக் கிளர்ச்சியூட்டிய ஒப்பரிய உற்றறிவு! மெய்யெல்லாம் சிலிர்க்கச் செய்த மேன்மையான நுகர்வு! விம்மிதம் விளைவித்த பெருமிதத் துய்ப்பு!*

*"கண்ணுள் விளைஞர்" புகழேந்தி படைத்தளித்த கண்காட்சியை நோக்கிய நமக்கு, அது முற்றிலும் புதுமையானதொரு பட்டறிவே.*

*"பெரியார் திசைமுகம்" என்று, தான் படைத்த கண்காட்சிக்கு ஓவியர் புகழேந்தி பெயரிட்டிருந்தார்.*

*பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பல்வகை முகத் தோற்றங்களைத் தீட்டி மக்கள் காணும் வகையில் தியாகராய நகர் மேனிலைப் பள்ளியில் 12.02.2002 ஆம் நாளிலிருந்து 16.02.2002 முடிய காட்சியாக வைத்திருந்தார் புகழேந்தி.*

*ஓவியக் கலை தமிழர்க்குப் புதியதன்று. தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் ஓவியங்கள் பற்றிய செய்திகள் நிறையவுண்டு. "மணிமேகலை"க் காப்பியத்தில் ஓவியச் செந்நூல் என்றே பேசப்படுகிறது. பல்லவர் கால-சோழர்கால ஓவியங்களைப் பல்வேறு ஊர்களில் அமைந்துள்ள கோவிற் சுவர்களில் காணலாம். சித்தன்ன வாசலில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் பாண்டியர் காலத்தவையாகும். ஆனால்..*

*இவ்வோவியங்கள் அத்தனையும் - மிகச் சிலவற்றைத் தவிர- தொன்மம் எனப்படும் புராண - இதிகாசப் புளுகுக் கதைகளில் இடம் பெறும் ஆரியத் தெய்வ மாந்தர்களைப் பற்றிய கற்பனை உருவங்களே. இந்திரன் , ரதி - மன்மதன், அகலிகை, நடராஜன் , கயிலாயம், வெள்ளையானை, கந்தர்வர்கள் என்பவை எடுத்துக் காட்டுக்காகச் சில. மராத்திய ஆட்சியில் தஞ்சை அரண்மனையிலும் சரஸ்வதி மஹாலிலும் வரையப்பட்ட ஓவியங்கள் பற்றிச் சொல்லவே வேண்டாம். இராமாயணக் கதைக் காட்சிகளும் கிருஷ்ணலீலைக் காட்சிகளும் மட்டுமே தீட்டப் பட்டுள்ளன.*

*செந்தாமரை - வெண்தாமரை மலருதல்; அன்னப்பறவை நீச்சல், யானைகள் குளித்தல், மீன்களின் துள்ளல் போன்ற இயற்கைக் காட்சிகளும் அரசன் - அரசி, இராஜராஜசோழன், நடனப் பெண்கள் போன்றார் ஓவியங்கள் விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய விலக்குகளாகும்.*

*மெல்ல மெல்ல, சிறுகச் சிறுக மாற்றங்கள் நிகழ்ந்தன.*

*இயற்கைக் காட்சிகள், மக்களின் வாழ்வியல் காட்சிகள் என வளர்ச்சி ஏற்படலாயிற்று. தொடர்ந்து ஓவியக் கலைஞர்களில் சிலர் தாங்கள் கொண்ட குறிக்கோள்களுக்குப் பட வடிவங் கொடுக்கத் துணிந்தனர்.*

*அண்மையில் சில ஆண்டுகளாக மக்களுக்காக உழைத்த சான்றோர்களின் நிழற் படங்கள், ஓவியங்கள் அடங்கிய கண்காட்சிகள் நாட்டில் நடைபெற்று வருகின்றன. அவற்றைக் காண வருவோரின் எண்ணிக்கை குறைவே. என்றாலும் அவர்களில் ஒரு சிலரேனும் சிந்திக்கத் தூண்டப்படுகின்றனர் என்பது நன்மை.*

*இவற்றையெல்லாம் மேற்கட்டிய வரலாற்றுப் பின்னணியுடன் கருதிப் பார்த்தால்தான் புரட்சி ஓவியர் புகழேந்தியினுடைய முயற்சியின் ஆழமும் அருமையும் புலப்படும். பல்வேறு ஓவியங்களின் இடையே தந்தை பெரியாரின் உருவப்படமும் வைக்கப்பட்ட கண்காட்சிகள் நடந்ததுண்டு. கழக நிகழ்ச்சிகளில் அய்யா பற்றிய பல்வகை ஓவியங்கள் நடத்தப்பட்டுள்ளன.*

ஆனால் வேட்கை மேலிட்ட கலைஞரொருவரால் பகுத்தறிவுப் பகலவனின் பல்வேறு தோற்றங்களை ஓவியங்களாகப் படைத்து , அய்யா பற்றிய அறிஞர் பெரு மக்களின் புகழுரைகளை இணைத்து, கண்காட்சியாக ஏற்பாடு செய்யப்பட்டது இதுவே முதலாவதாகும்.

புகழேந்தியின் ஓவியப் புனைவு தனித்தன்மை வாய்ந்தது. பெரியாரய்யாவின் தலை-முகம்-தோள்கள்- அவற்றையொட்டி அமைந்துள்ள மேல்மார்பு ஆகிய உறுப்புகளை மட்டும் அடக்கிக் கொண்ட மார்பு ஓவியங்களாக இருபத்தைந்து படங்களை வரைந்திருந்தார். ஒவ்வொரு படத்தின் கீழேயும் அய்யாவைப் பற்றிய அறிஞரொருவரின் புகழுரை அல்லது பாராட்டுப்பா இடம் பெற்றிருந்தது.

முதலாம் படமே நம்மைக் கவ்வி இழுக்கும் கவர்ச்சி படைத்ததாய் இருந்தது; தொண்டு செய்து, பழுத்த பழமாம் தந்தை பெரியாரவர்கள் - அடக்கத்தின் திருவுருவாக இருகைகளையும் கூப்பி நம்மை வரவேற்பது போல் அமைந்திருந்தது; அய்யா மெய்யாய் அணிந்திருந்த விரலணிகூட விடுபட்டுப் போகாமல் இயற்கையாய் இருப்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து ஒரு பக்கத் தோற்றமாக அமைந்த அய்யாவின் ஓவியம் வைக்கப் பட்டிருந்தது. மூன்றாவதாக வைக்கப்பட்டிருந்த ஓவியத்தில் அய்யா உணர்ச்சியுடன் தம் வலக்கையை - பெருவிரல் சுண்டுவிரல் இரண்டும், நடுவிரல்கள் மூன்றும் இணைந்திருக்க, அவற்றில்படாமல் பிரிந்து விரிந்திருக்கும்படியாக - உயரே தூக்கிக் காட்டும் தோற்றம் வரையப்பட்டிருந்தது. அய்யா அவர்கள் உரைப்பொழிவு நிகழ்த்தும் போது அருகிலிருந்து கண்டோர் இத்தோற்றத்தை நன்கு சுவைப்பார்கள் என்பது உறுதி.

அடுத்த ஓவியத்தில் தந்தை பெரியார் சற்றே குனிந்த நிலையில் சிந்தனை செய்யும் அழகான தோற்றம் காட்டப்பட்டிருந்தது.

அய்ந்தாம் படம் மூடிய கண்களுடன் அய்யாவின் முக்கால் பகுதி முகத் தோற்றத்துடன் இருந்தது. முகம், தோள், முழு மார்பு ஆகியவற்றைக் காட்டியது அடுத்த ஓவியம். ஏழாம் ஓவியத்தில் பகுத்தறிவுப் பகலவனின் அழுத்தமான தனிப்பார்வை உணர்த்தப் பட்டிருந்தது.

அரை விழி திறந்தாற்போல் அய்யா இருக்கும் ஒருபக்கத்தோற்றம் அடுத்த படத்தில் அமைந்திருந்தது. அதை அடுத்த ஓவியம் புன்னகை ஒளிந்து கொண்டிருக்கும் பெரியாரின் 90 விழுக்காட்டு முகத்தை நமக்குக் காண்பித்தது. வெள்ளை உள்சட்டையுடன் ஒரு பக்கத் தோற்றத்துடன் அய்யாவைக் காட்டுவது பத்தாம் படம்.

திறந்த சட்டையுடன் திறந்த கண்களுடன் நேர்பார்வை செலுத்தும் தந்தை பெரியாரின் முழுமையான முகத் தோற்றத்தை அடுத்த ஓவியம் பார்வையாளர்கட்கு அறிமுகப்படுத்தியது. ஓய்ந்த நேரங்களில் அய்யா அவ்வாறுதான் தோன்றுவார்.

மேலே கருஞ்சட்டை உள்ளே வெள்ளைக் குறுஞ்சட்டை என்னும் நிலையில் அய்யாவின் ஒருபக்கத் தோற்றம் அடுத்ததாக இடம் பெற்றிருந்தது.அடுத்து எள்ளல் சுவையைப் புலப்படுத்தும் அய்யாவின் முகத்தோற்றத்தை ஓவியமாக்கியிருந்தார் புகழேந்தி.

கறுப்பு மேலாடையுடன் தந்தை பெரியார் இடது கையில் தாள் ஒன்றை ஏந்திப் படிக்கும் ஒரு பக்கத் தோற்றம் அடுத்த ஓவியத்தில் வரையப்பட்டு, நம் கருத்தைக் கிளறி விடும் மனப்பான்மையதாய் விளங்கிற்று.

நுண்பெருக்காடி ஏந்தி எழுத்துகளுள் நுழைந்து மேய்ந்தாய்கின்ற பேரறிவாளர் பெரியாரின் தோற்றம் பதினைந்தாம் படத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆடிதான் அய்யாவின் வாழ்வில் எத்துணை துணையாய் இயங்கியது.

கொடுமை கண்டு கொதித்தெழுந்த இனக் காவலரின் கடுமைத் தோற்றம் காண வேண்டுமா? இதோ என்று ஓவியமாய் எழுதிக் காட்டியுள்ளார் புகழேந்தியவர்கள்.

அய்யா, எதுவாயிருந்தாலும் கருதிப் பார்க்கும் சிந்தனையாளர். அத்தகையதொரு தோற்றம் அடுத்த ஓவியத்தில் நமக்குக் கிட்டிற்று. அதற்கு அடுத்த ஓவியம் அய்யா அவர்கள் ஏறிட்டுப் பார்ப்பது போன்ற எழிலான தோற்றத்தைக் காட்டியது.

முற்றிலும் கருஞ்சட்டைப் பின்புலத்தோடு அய்யா உருவம் தீட்டப்பட்டு அடுத்ததாக வைக்கப்பட்டிருந்தது. வெண்மையான உள்சட்டையுடன் அறிவின் எல்லையாம் பெரியாரவர்களின் குனிந்த தோற்றம் இருபதாம் ஓவியத்தில் வரையப்பட்டிருந்தது. அடுத்த படத்தில் முழுப் புரட்சியாளரின் முறுவலிக்கும் முழுமையான முகத்தைக் கருப்பாடைத் துணைப்புலத்துடன் கண்டு மகிழ முடிந்தது. மாறாக அய்யாவின் அக்கறை உணர்வு ஒருபக்க முகத்தோற்றமாகக் காட்டப் பட்டிருந்தது. மீண்டும் நம் இன மக்களைக் குறித்த அவலம் தேங்கிய தோற்றம் ஓவியமாக்கப்பட்டிருந்தது. இறுதியானதாக அய்யா அவர்கள் ஆழ்ந்த சிந்தனைக்கு இலக்காகியுள்ள தோற்றம் ஓவியமாக்கப்பட்டிருந்தது.

இப்படிப்பட்ட இருபத்தைந்து ஓவியங்களைத் தோழர் புகழேந்தியவர்கள் - பெயரளவில் என்றில்லாமல் - நன்கு திட்டமிட்டு ஒரு வகை வெறியோடு படைத்துள்ளார். வெள்ளை வண்ணம், கருப்பு வண்ணம், அணுக்கூறுகளினும் சிறிதான புள்ளிகள் ஆகியவற்றைக் கொண்டு தன் தூரிகையை இயக்கி விந்தை புரிந்திருக்கிறார் அவர். என்னே அவரின் இரு வண்ணக் கைவண்ணம்!

அக்காலத்துப் புகழேந்தியார் பாவியப் புலவரென்றால், நம் காலப் புகழேந்தி ஓவியப் புலவர் என்போம். கண்காட்சியைப் பார்வையிட்ட தமிழர் தலைவர் மானமிகு கி.வீரமணியவர்கள் குறிப்பிட்டதைப் போல, "ஓவியம் என்பது சமுதாய மாற்றத்திற்கானதொரு கருவியாகப் பயன்பட வேண்டும். தமிழ்நாடு முழுவதிலும் இந்த ஓவியக் கண்காட்சியை நடத்த வேண்டும். ஓவியர் புகழேந்தி நம்முடைய இனத்திற்குக் கிடைத்த மாபெரும் செல்வம்."

புது டில்லியில் புதியதாக எழும்பவிருக்கும் பெரியார் மய்யத்தில் புகழேந்தியின் பெரியார் ஓவியங்கள் இடம்பெற்று, அதன் வழி அவருக்கு ஞாலப் புகழ் கிட்ட வேண்டுமென நெஞ்சினிக்க வாழ்த்துகிறோம்!

## திசை காட்டியவனை நினைவூட்டிய திசைமுகம்

தீக்கதிர் ( 24.02.2002 ) **அ.குமரேசன்**

"கடவுளின் பேரால் நிலவும் மூடநம்பிக்கைகளை எதிர்த்தும், சாதியின் பேரால் நிலவும் அடிமைத்தனத்தை எதிர்த்தும், மனிதர்களிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளைச்சாடி, தன்மான உணர்வை ஊட்டியும், பெண் விடுதலை, இனவிடுதலைக்காக இயங்கியும் வாழ்ந்த மாபெரும் புரட்சியாளராக, தமிழர்களின் திசைமுகமாகத் திகழ்பவர் பெரியார். அம்முகத்தை ஓவியத்தில் பதிவு செய்வது எனது வரலாற்றுக் கடமை "- என்ற அறிவிப்போடு ஓவியர் கு.புகழேந்தி சென்னையில் "திசைமுகம்" என்ற தனது ஓவியக் கண்காட்சியை அண்மையில் நடத்தினார்.

பெரியாரின் பன்முகத் தோற்றத்தைப் பதிவுசெய்த அந்த ஓவியங்கள் ஒவ்வொன்றும் கலைப்படைப்பு என்கிற முறையிலும், கருத்துப்பரவல் என்கிற முறையிலும் பார்வையாளர்களை ஈர்த்தன. குடந்தை ஓவியக் கல்லூரியில் படித்து தற்போது அங்கேயே ஆசிரியராகவும் பணியாற்றி வரும் புகழேந்தி, ஏற்கனவே **உறங்கா நிறங்கள்**, குஜராத் நிலநடுக்கப் பேரழிவு குறித்த **சிதைந்த கூடு**, ஆகிய கண்காட்சிகள் மூலம் ஓவிய இரசனை உலகத்தில் தன்னை அறிமுகப்படுத்தி நிலைநாட்டிக் கொண்டவர். சமூகச் சீர்குலைவுகளைத் தனது தூரிகையால் எரித்திட வேண்டும் என்ற முனைப்போடு இவர் படைத்த ஓவியங்கள் **எரியும் வண்ணங்கள்** என்ற நூலாகவும் 1994 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

வ(ர்)ண்ணங்களை எரித்தால் மிஞ்சுவது கருப்பு வண்ணம்தானே? அந்த கருப்பு வண்ணத்திலேயே பெரியாரின் மாறுபட்ட முகத்தோற்றங்களைப் படைத்திருந்தார். தமிழகத்திலேயே முதன்முறையாக ஓவியத்துறை முதுகலைப் பட்டம் பெற்றவரான புகழேந்தி, தூரிகையைப் பயன்படுத்தாமல் முழுக்க பேனா மற்றும் கருப்பு மையையே பயன்படுத்தி அந்த ஓவியங்களை உருவாக்கியுள்ளார். ஏன் கருப்பு வெள்ளை? “அழுத்தமான உணர்வுகளை வெளிப்படுத்துவதில் கருப்பு வெள்ளையை மிஞ்சுகிற வேறொரு வண்ணம் கிடையாது. பெரியார் நல்ல சிவப்பு . எனினும் அவர் சமூக அவலத்தை சுட்டிக்காட்டும் வகையில் கருப்பு ஆடையையே அணிந்தார்.நானும் அவரை கருப்பு வண்ணத்திலேயே பதிவுசெய்ய விரும்பினேன்” என்றார் ஓவியர்.

தாடி உள்ளிட்ட பெரியாரின் முக நுட்பங்களை பேனா+மை மூலமே நுணுக்கமாகப் பதிவு செய்ய முடியும் எனத் தாம் கருதியதாகவும் தெரிவித்தார்.

மூடநம்பிக்கைகள், பெண்ணடிமைத்தனம், சாதியம் முதலிய காலத்துக்கொவ்வாத பழமைகளிலேயே இன்னும் ஊறிக்கிடக்கும் தமிழ்ச்சமுதாயம் பற்றிய பெரியாரின் கவலை, இதை மாற்ற வேண்டும் என்கிற சிந்தனை, காலமெல்லாம் இதற்காக உழைத்த களைப்பு, இன்னும் மாறாத சமூகம் குறித்த கோபம், எத்தனை தடைகளும் சோர்வுகளும் ஏற்பட்டாலும் விடமாட்டேன் என்கிற நெஞ்சுறுதி ஆகிய அனைத்தும் புகழேந்தி வடித்துள்ள பெரியார் முகங்களில் வெளிப்படுகின்றன. நேரில் கண்டு அனுபவிக்க வேண்டிய உணர்வு இது.

பெரியாரின் பல்வேறு செயல்பாடுகள், மாறுபட்ட தோற்றங்கள் இருக்க முகங்களை மட்டும் தேர்ந்தெடுத்தது ஏன்? “பெரியாரின் முகம் பொதுவாகவே ஓர் ஓவிய முகம் என்பது எனது கருத்து. ஓவியக் கலைஞர்களுக்குஅவரது முகமும், முகத்தின் சுருக்கங்களும், விழிகளும், புருவங்களும், பறக்கும் தலைமுடியும், அடர்ந்த தாடியும் அற்புதமான படைப்பு அனுபவத்தை அளிப்பவை. அது மட்டுமல்ல. அவரது முகம் வெளிப்படுத்தும் உணர்வுகள் சமுதாயத்தின் உணர்ச்சிகளாக இருப்பதாக நான் கருதுகிறேன். அதை ஓவியத்தில் கொண்டு வருவதன் மூலம் இன்று பெரியாரை நினவூட்ட விரும்புகிறேன்” என்றார்.

நவீன ஒப்பனைகளோடு இந்துத்வா கும்பல்கள் மூட நம்பிக்கைகளையும், சமூக ஏற்றத்தாழ்வுகளையும் மீண்டும் நிலைநிறுத்த முனைந்து கொண்டிருக்கும் இந்த நாளில் பெரியாரை இவ்வாறு நினவூட்டுவது ஒரு முக்கியத் தேவைதான்.

பெரியாரின் செயல்பாடுகள் குறித்த ஓவியக் கண்காட்சி ஒன்றை ஒரு வரலாற்றுக் கண்காட்சியாகவே அமைக்கும் விருப்பம் தனக்கு இருப்பதாகவும் புகழேந்தி தெரிவித்தார்.

பெரியார்தான் தன்னை மார்க்சியத்தையும் பார்க்க வைத்ததாகக் கூறிய புகழேந்தி, “பெரியார் இல்லையேல் இன்று நான் ஒரு ஓவியனாக உருவெடுத்திருக்க முடியாது. எங்கோ மாடு மேய்த்துக்கொண்டுதான் இருந்திருப்பேன். அவரை நேரில் பார்த்து வரைய முடியாத இழப்புணர்வு எனக்கு உண்டு. அந்த ஏக்கத்தை இந்த ஓவியங்கள் மூலம் தீர்த்துக் கொண்டிருக்கிறேன்” என்று சொந்த உணர்வையும் பகிர்ந்து கொண்டார்.

பெரியாரை வெறும் கடவுள் மறுப்பாளர் என்ற சிமிழுக்குள் அடைக்க சிலர் முயல்கிறார்கள். ஆனால் அவர் மாபெரும் மனிதநேய இயக்கவாதி.

அறிவியல், கல்வி, பெண்விடுதலை, சாதிய ஒழிப்பு, மதநல்லிணக்கம், சமத்துவம் என பல்வேறு விடியல்களுக்காக போராடியவர் அவர். ஆகவேதான் நவீன தமிழகத்தின் ஒரு அடையாள முகமாகப் பெரியாரைத்தாம் எடுத்துக்கொண்டதாகவும் ஓவியர் கூறினார். அவர் கூறியது உண்மைதான் என்பது போல் பார்வையாளர்களில் ஒருவர், “நான் கடவுள் பக்தி உள்ளவன்தான். ஆனாலும் இன்று எங்கள் சமூகமும் குடும்பமும் நானும் சமுதாயத்தில் மரியாதையோடு வாழ்வதற்கு பெரியார்தான் காரணம். அவருக்கு அஞ்சலி செலுத்த இந்தக் கண்காட்சி ஒரு வாய்ப்பு அளித்திருக்கிறது” எனக் கூறியது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய உண்மையான உணர்வுகள் தழைத்திருக்கும் வரையில் சனாதனக் கும்பல்கள் பெரியார் மையங்களை இடித்து விடுவதால் பெரியார் சிந்தனைகளைத் தடுத்த நிறுத்திவிட முடியாதுதானே?

*நந்தன் ( 1-15 மார்ச் 2002 )*

*திரும்பிய திசையெல்லாம் அந்த முகம் தெரிந்தது.* **திசைமுகம்** *என்ற தலைப்போடு தந்தை பெரியாரின் ஓவியமாய் வரையப்பட்ட முகம் சென்னை முக்கியப்பகுதியெங்கும் சுவரொட்டி மூலம் புன்னகை சிந்திக் கொண்டிருந்தது. பிப்ரவரி 12,13,14-ஆம் நாட்களில் நடந்த ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி பற்றிய சுவரொட்டி அது. பூக்களையும், நிலவையும், கடலையும், பெண்களையும் தான் பொதுவாக ஓவியர்கள் தேர்ந்தெடுப்பதுண்டு. இன்னும் சிலர் ஏழ்மையையும், வாழ்க்கைப் போராட்டத்தைச் சித்திரிக்கும் காட்சிகளையும் தேர்ந்தெடுப்பதுண்டு. ஆனால் இவருக்கு மட்டும் எப்படிப் பெரியாரை வரைய வேண்டுமென்று தோன்றியது? ஆச்சரியத்தோடு அந்தக் கண்காட்சிக்குச் சென்ற நமக்கு கலைஞன் என்பவனுக்குப் படைப்பின் மீது மட்டுமல்ல தான்வாழும் சமூகத்தின் மீதும், மிகப்பெரிய பொறுப்பிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது.*

*தொண்டு செய்து பழுத்த பழம்*
*தூயதாடி மார்பில் விழும்*
*மண்டைச் சுரப்பை உலகுதொழும்*
*மனக்குகையில் சிறுத்தை எழும்*

*என்ற புரட்சிக் கவிஞரின் கவிதை வரிகளின் அலங்கரிப்போடு முதல் ஓவியம் அமைந்திருந்தது.*

*மொத்தம் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த 25 ஓவியங்களும் பெரியாரின் வெவ்வேறு உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பதாக அமைந்திருந்தன.*

*ஆவேசமும் , அரவணைப்பும் அக்கறையுமாய் அந்தப் பகுத்தறிவுப் பகலவனின் முகங்களில் இருந்து பிரவகித்த உணர்ச்சி, பெரியார் தொண்டர்களையும், ஓவிய இரசிகர்களையும் பெரிதும் ஈர்த்திருந்தது. வடிவமில்லாத முகங்களும் கோடுகளுமாய்ப் புரிந்து கொள்ளமுடியாத அல்லது தேவையில்லாத ஒரு தளத்தில் இயங்கி வரும் நவீன ஓவியங்களுக்கு மத்தியில், புகழேந்தி வரைந்திருக்கும் பெரியாரின் முகங்கள் ஓவியக் கலைக்கு ஒரு முகவரியாகவே அமைந்துள்ளது என்றே சொல்லலாம்.*

*ஒரு சமூகப் புரட்சியாளனைத் தன் தூரிகை பதிவு செய்ய வேண்டும் என்று விரும்பிய ஓவியர் புகழேந்தி, "இவை வெறும் கோடுகள் அல்ல. ஓர் இனத்தின் வரலாறும் அந்த இனத்துக்கான விடுதலைப் போராட்டத்துக்காகத் தன்னை அர்ப்பணித்த தலைவனுக்கான நன்றியறிதலும் ஆகும். ஆடுமாடு மேய்த்துக் கொண்டும், ஏர் பிடித்து உழுது கொண்டும், சாக்கடை அள்ளிக் கொண்டும் கிடந்த ஓர் இனத்தின் கைகளில் பேனாவையும், புத்தகத்தையும் தூரிகையையும் எடுத்துத்தந்த அந்தப் புரட்சியாளருக்கு இது நான் செய்ய வேண்டிய கடமை. அது மட்டுமல்ல, பெரியாரின் முகம் ஓர் ஓவியனை வரையத் தூண்டும் வசீகரம் கொண்டதும் கூட. அந்த முகத்தின் ஒவ்வொரு கோணங்களை வரையும்போதும், இந்த ஒட்டுமொத்த சமூகத்தின் நன்றியறிதலும் என் தூரிகை வழியே கசிந்தது" என்று நெகிழும் புகழேந்தி "தூரிகை என்பது எனக்கு ஓர் ஆயுதம். அது பெரியார் வழியில் நின்று அவர் எடுத்த போராட்டத்தைத் தொடரும். அதன் தொடக்கமாகத்தான் இன்று உலகளாவிய புரட்சிச் சிந்தனையாளராகக் கொண்டாடப்படும் தந்தை பெரியாரின் பல்வேறு உணர்வுகள் ததும்பும் முகத்தைப் பதிவு செய்துள்ளேன்" என்றும் பெருமிதம் பொங்கக் கூறினார். "இளம் வயது காலத் தோற்றங்களையும் சேர்த்திருக்கலாமே" என்று நாம் குறுக்கிட்டபோது, "இதை நான் வரலாற்றுப் பதிவாகச் செய்யவில்லை. அவருடைய ஆளுமைகளையும் முதிர்ந்த வெளிப்பாடுகளையும் தான் பதிவு செய்துள்ளேன்" என்றார். பெரியாரை மட்டுமே ஓவியமாக வரைந்து அதை ஒரு கண்காட்சியாகவும் நடத்திய ஓவியர் புகழேந்தியைப் பாராட்டத்தான் வேண்டும். ஓவியக் கண்காட்சியைத் தமிழர் தேசியக் கட்சித் தலைவர் பழ.நெடுமாறன் தொடங்கிவைத்தார்.*

# A REFORMER WHO CAN'T BE BRUSHED ASIDE

For Pugazendhi, it has been his wish to propagate the ideals of Periyar for life. He firmly believes that his principles have helped to solve the maladies afflicting the society, and they are still relevant to deal with the present day problem.

The two-day exhibition of paintings of E.V.R.Periyar, the founder of the Dravidian movement, held at Tirunelveli, projected the different faces of this social reformer over six decades. About 25 pen and ink portraits, painted with artistic skill and graphic depth by K.Pugazendhi, were presented at the exhibition titled Periyarin thisaimugam . The portraits formed the latest linear techniques in painting.

Pugazendhi (35), a teacher of the Kumbakonam collage of Arts, was motivated to take up the task by the documentation of the life-sketch of social scholars and sociologists world over. "I felt that it was my bounden duty to document Periyar's achievements. Painting every portrait of Periyar, I have a feeling that I am documenting a fresh view of the present day history, and I am only doing a humble service to the great social reformer", he says.

Though the face of Periyar is seen everyday in banners and wall posters, the portraits, documented through fine arts, will have an everlasting impression on the minds of the youth, and will be more appealing.

Mr. Pugazendhi proposes to document the life history of Periyar through pictures and portraits in the near future, and to hold the exhibition in various towns and cities till the first week of June.

In the past, he captured through his pen-brush the events that took place in the country and elsewhere in the world for a decade from 1983, including Ealem struggle, the Palestine struggle and the demolition of the Babri Masjid, under the title 'Burning Colours'.

His another achievement is 'Unslumbering Colours', an exhibition of paintings on the important occurrences in the century and the great leaders and social thinkers connected with them.

It went down very well in TamilNadu and 15 centres in Malaysia and Singapore.

Last year, he brought alive the devastation caused by the earthquake in Gujarat through a 150-feet-long painting. 'Sithaintha Koodu' and raised funds for the victims.

Periyar's achievements should be known to Indians and foreigners alike, he says.

Pugazendhi is planning to organize 'Periyar Thisaimugam' and Unslumbering Colours in various European and American countries shortly.

- Syed Muthahar
The Hindu ( 30.04.2002 )

# கவர்ச்சியான தலைவர் பெரியார்

பெரியாரை ஒரு புரட்சிக்காராக , சீர்திருத்த விரும்பியாக, சித்தாந்தவாதியாகத் தான் பார்ப்பேன். ஆனால், ஓவியர் கு.புகழேந்திக்குப் பெரியாரை அழகியலோடு பார்க்க வேணடுமென்று ஆவலும் பிறந்திருக்கிறது. கடந்தவாரம் இவரது 'திசைமுகம்' ஓவியக் கண்காட்சி, தி.நகர் அரசு மேல்நிலைப் பள்ளியில் துவங்கியது.

சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் பெரியார், தள்ளாத வயதிலும் பூதக் கண்ணாடி வைத்துப் புத்தகம் படிக்கும் பெரியார், மேல்நோக்கிப் பார்த்து, கும்பிட்டுச் சிரிக்கும் பெரியார்... இப்படிப் பல கோணங்களில் பெரியாரைச் சிறை பிடித்திருக்கிறது புகழேந்தியின் தூரிகை.

கருப்பு, வெள்ளையில் படங்களை வரைந்திருக்கிறார் புகழேந்தி. இவற்றுடன் பெரியார் மீது தனக்குள்ள அபிமானத்தையும் சேர்த்தே குழைத்து இவர் சித்திரங்கள் தீட்டியிருப்பதில் ஓவியங்களில் உயிரோட்டம் மின்னுகிறது.

கண்காட்சியில் துவக்க விழாவில் பேசிய சுப.வீரபாண்டியன், "வயதான காலத்தில் தங்கள் நரையை மறைக்க 'டை' அடிக்கும் தலைவர்களை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் பெரியார் இயல்பாகவே வாழ்ந்தார். அதனால், அவரது வெள்ளை முடியும் அவருக்கு கூடுதல் அழகைக் கொடுத்தது" என்றார். (அப்போது கூட்டத்தினர் ஆளாளுக்கு யார் யாரையோ நினத்துச் சிரித்தார்கள்.)

வழக்கறிஞர் அருள்மொழி,"ஓவியர் சந்தானம், பெரியாரை நேரடியாக இருத்தி அவரை வரைந்தார்.அந்த அனுபவத்தைச் சொல்லும் போதெல்லாம், "ஆகா! பெரியார் என்ன ஒரு அழகு! வாழ்க்கையில் மறக்கமுடியாத அனுபவம்" என்று சிலாகித்துச் சொல்வார்" என்ற அருள்மொழி, பெரியார் ஒரு கவர்ச்சியான தலைவர் என்றார்.

இறுதியில் பேசிய நெடுமாறனும் அரசியல் ஆவேசமின்றிப் பேசினார். கூட்டத்திற்குப் பார்வையாளர்களாக வந்திருந்த பத்திரிகையாளர் ஞாநி, வி.கே.டி.பாலன் ஆகியோரும் இன்ஸ்டன்ட் சிறப்பு அழைப்பாளர்களாகப் பேசினார்கள். அதிலும் நெற்றியில் குங்குமம், சந்தனம் மணக்க வி.கே.டி. பாலன் பேசியது இன்னும் சுவாரஸ்யம். 'இன்று பெரியார் ஓவியக் கண்காட்சியைத் துவக்கியது மிகப் பொருத்தமான விஷயம். 'குரங்கிலிருந்துதான் மனிதன் பிறந்தான். கடவுள் மனிதனைப் படைக்கவில்லை' என்பதை உலகுக்குச் சொன்ன டார்வின் பிறந்த நாள் இன்று. கடவுள்களையும், காட்சிகளையும் வரைந்து ஓவியக்கலையை வியாபாராமாக்கி விட்ட சூழ்நிலையில், பெரியாரை வரைந்திருக்கிற ஓவியர் புகழேந்தி பாராட்டப்பட வேண்டியவர்' என்றார்.

ஓவியர் புகழேந்தி தமிழகத்திலேயே முதன்முதலில் ஓவியத் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றவர். இந்தியாவின் பல நகரங்களில் இவரது ஓவியக் கண்காட்சி மலேஷியா, சிங்கப்பூரிலும் நடைபெற்றிருக்கிறது.

இந்தக் கண்காட்சியில் இடம் பெற்ற இருபத்திநான்கு ஓவியங்களும் இரு காலண்டர்களாக வெளிவர இருக்கிறது.

*தமிழன் எக்ஸ்பிரஸ் 20-26 பிப்ரவரி 2002*

## முகங்களின் காட்சி

சரவணா ஸ்டோர்ஸ் – பூங்காற்று தனசேகர்

'தொண்டு செய்து பழுத்த பழம்; தூயதாடி மார்பில் விழும்' என்று தந்தை பெரியாரின் முகப் பொலிவை பாவேந்தர் எழுத்தில் வடித்ததுபோல பெரியாரின் பல்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஓவியங்களாக வடித்துள்ளார் ஓவியர் புகழேந்தி.

அந்த ஓவியங்களை 'திசைமுகம்' கண்காட்சியில் தரிசித்தோம். ஓவியர் புகழேந்தி ஓவியத்துறையில் தமிழகத் திலேயே முதன்முதலில் முதுகலைப் பட்டம் பெற்றவர். தற்போது குடந்தை ஓவியக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

நிமிர்ந்து, குனிந்து, கண்ணாடி அணிந்து, பூதக் கண்ணாடி உதவியுடன் புத்தகம் படித்து, ஆயாசமாக கண்ணாடியைக் கழற்றிவிட்டு... அத்தனை பெரியார் முக ஓவியங்களிலும் புகைப்படங்களைத் தாண்டிய உயிர்ப் பிருந்ததை பார்வையாளர்கள் அனைவரும் உணர்ந்துள்ளதை அங்கிருந்த குறிப்பு கருத்தேட்டில் எழுதப்பட்டிருந்த வரிகள் உணர்த்தின.

இனி ஓவியர் புகழேந்தி...

"பெரியாரின் பல்வேறு முகங்களை ஓவியமாகப் பதிவு செய்வதன் மூலம் மீண்டும் அவரை நினைவுப்படுத்த முயற்சி செய்துள்ளேன். '20ஆம் நூற்றாண்டு ஓவியங்கள்' என்ற தலைப்பில் நான் 20-ஆம் நூற்றாண்டின் பூமியை வரையத் தொடங்கியபோது உலகப் பெரும் தலைவர்களின் வரிசையில் பெரியாரையும் வரைந்தேன். தமிழ்நாட்டின் சார்பில் உலக மறுமலர்ச்சித் தலைவராக பெரியாரை, அவர்தம் கருத்துக்களைக் கொண்டு செல்ல முடியும் என்று அப்போதிருந்து எனக்குள் கிளம்பிய தீ தான் இந்த திசைமுகம் கண்காட்சி வரை பற்றி எரிந்து கொண்டுள்ளது.

வந்து செல்லும் பார்வையாளர்கள் பலரும் பெரியாரின் முகங்களின் கண்காட்சி இது என்பதைவிட அவர் தம் உணர்வுகளை, உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் உன்னத முயற்சி என்றே குறிப்பிட்டுச் சொல்கின்றனர்.

"இந்த 25ஓவியங்கள் 5 மாதங்களில் வரைந்து முடித்தேன். இதற்காகப் பெரியாரின் பற்பல உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் புகைப்படங்களை புகைப்படக் கலைஞர் சுபா சுந்தரம் பெருமளவில் கொடுத்து உதவினார். பெரியார் திடலிலிருந்தும் பல புகைப்படங்கள் கிடைத்தன."

என்ற புகழேந்தி, பெரியாரை ஒரு முறைகூட நேரில் பார்க்காதவர் என்பது குறிப்பிடத்தக்க செய்தி.

மரபு சார்ந்த – மரபு சாராத
ஓவிய வெளியில் ஒலிக்கும்
எதிர்க்குரல்

ஒரு கலகக்காரனின் கதை –
கவிதையாக – காவியமாக
வெடித்திருக்கிறது
புகழேந்தியின் தூரிகையில்

சமூகத்தின் முட்புதர்களை
வெட்டிச் சரித்துச் செல்லும் ஒரு
போராளியுடன் சேர்ந்து – சிந்தனைத்
தளத்தில் நகர்ந்து செல்கிறது
புகழேந்தியின் விரல்கள்

காற்றில் அலையும் பெரியாரின்
மயிர் நுனிகளில் சிங்கத்தின்
உறுமல் ஒலியைப் பதிவு
செய்திருக்கிறார் புகழேந்தி
தன் கறுப்பு வண்ணக் கோடுகள் வழியே
முடிவிலா வெளி நோக்கி.

தோன்றிற் புகழொடு
தோன்றியிருக்கிறார் 'புகழ்'
என்பதில்
என்ன ஆச்சர்யம்!

உலகெலாம் உன்கொடி
பறக்கட்டும்
தூரிகை நுனியில்! – **கிருஷி**

இறந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக இவ்வுலக இயற்கையாம் என்று சொன்ன வள்ளுவனின் முகம் புகழேந்தியின் கைவண்ணமாக இன்று கண்டேன். ஒரு முகத்தில் கண்ணாடி இல்லை. முகத்தில் ஒரு தொய்வு இருக்கிறது. ஒரு வேதனை, கண்களில் கனல் தெரிகிறது. கனன்று கொண்டிருக்கும் நெருப்புஅகலாகக் கண்ணைக் காட்டுகிறார். அதை மிகத் துல்லியமாக நண்பர் ஓவியர் புகழேந்தி அவர்கள் தன் கோடுகளிலே சிறைப்பிடித்துக் கொடுத்திருக்கிறார் என்றால் அது உணர்வின் வெளிப்பாடு.

மருத்துவர் **செ.நெ.ந.தெய்வநாயகம்**

புகழேந்தி மக்களுக்காக ஓவியம் வரைபவர். இந்த பெரியார் ஓவியங்கள் அனைத்தும் நன்றாக இருக்கிறது. இது மக்களிடம் செல்ல வேண்டும் என்றால் இவைகளைக் காலண்டர் வடிவில் போடவேண்டும். அவை ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டும். அதற்கு அனைவரும் ஆவன செய்ய வேண்டும். நான் பெரியாரிடம் வேலைக்குச் சேர்ந்தேன். அவர் என்னை முழு நாத்திகனாக மாற்றி விட்டார். அவ்வளவு அன்பாகப் பேசக்கூடியவர். அவரைப் போல் ஒரு தலைவரை இன்றுவரை கண்டதில்லை.

மூத்த சிற்பக் கலைஞர் **ச. கன்னியப்பன்**

ஓர் உன்னதக்
காவியத் தலைவனை
ஓவியத்தில் வடித்த
உன் விரல்களே
உண்மைத் தூரிகைகள்
வரலாறு வரைந்து
வண்ணத்தில் காட்டிய
புகழேந்தி தொண்டு
வாழ்க! வளர்க!

**கே.ஜோதிபாண்டியன்**
(திரைப்பட இயக்குநர்)13.02.2002

பெரியார் என்று சொன்னாலே பயந்து ஓடி ஒளிகின்ற இந்தக் கால கட்டத்தில் இன்றைய இளம் தலைமுறையினருக்கு, பெரியாரின் கோட்பாடுகள் பற்றித் தெரிவிக்க வேண்டிய கட்டாய காலகட்டம் இது. இந்த அரிய முயற்சிக்கு எனது பாராட்டுக்கள்.

**ம. இராமாத்தாள்**
15.02.2002

பெரியாரின் பலமுக வடிவங்களும், அன்னாரைப் பற்றி அறிஞர் கூறிய மொழிகளும் கண்டேன். மனமகிழ்ந்தேன். இளமைக்காலங்களில் நான் கண்டு மனத்திரையில் இருந்த பெரியாரின் திருஉருவம் ஓவியர் புகழேந்தியின் கைவண்ணத்தில் கண்டேன். பெரியாரின் ஒரே தோற்றத்தைக் கண்ட இக்கால இளைஞர்களுக்கு இது ஒரு வரலாற்றுக் காட்சி.

**V.சேகர்**

திராவிட இயக்கத்தினர் பெரியாரின் சிந்தனைகளை-தத்துவங்களைத் தோற் கடித்து விட்டனர். ஆனால் தமிழன் மறக்க வில்லை என்பதை ஓவியர். கு. புகழேந்தி யின் ஓவியங்கள் பறைசாற்றுகின்றன.

அதிகம் படிக்காத
அய்யாவை
நம்பினோம்
நமக்குப்
பல்கலைக் கழகங்கள்
கிடைத்தன
பல்கலைக் கழகங்களில் படித்த
இவர்களை
நம்பினோம்.
நமது
அரிச்சுவடிகளும்
தொலைந்து போயின!

என்னும் அறிவுமதியின் மதிப்பீடு நூறு விழுக்காடு உண்மை. தமிழர் எழுவர்! தருக்கர்களை வீழ்த்துவர்.

**செவ்வியன்** 13.02.2002

***திராவிடர்*** என்பதில் நம் இலக்கு எது என்பதைத் தெரிவு செய்துள்ளதும், நம் பொது எதிரி யார் என்பதை இனம் காணும் அளவில் பரந்துபட்ட சூத்திர வெகுசன மக்களின் எழுச்சி இயக்கமாக உருவான திராவிடர் கழகத்தை வர்த்தகத்தனமாக ***திராவிட என்ற*** பிராந்தியத்திலுள்ள அர்த்தத்தில் ஆரிய நாய்களின் ஒட்டுக்காக, திரித்து பிழைப்பு நடத்தும் இன்றைய திராவிடத் தலைவர்கள் என்று கூறிக் கொள்ளும் அனைவரும் அய்யாவை மறந்து காவியில் கரையும் பொழுது தங்களின் இந்த பணி என்பது மிகப் பெரிய பணி, போர்க்குணத்தோடு அய்யாவின் பல்முக ஓவியம் வரைந்த உங்களின் கைகளுக்கு ஒரு கோடி முத்தங்கள், வாழ்த்துக்கள்

**செயந்தன்**

ஒரு மனிதனின் சிந்தனையை முகம் மட்டுமே கண்ணாடி போல் காட்டும். இந்த நுட்பத்தைப் புரிந்த ஓவியர் கு.புகழேந்தி, பெரியாரின் பன்முக உணர்வுகளை இணையற்ற ஓவியங்களாகத் தீட்டியுள்ளார். தமிழகம், இந்தியா, பிறநாடுகளில் இவ் ஓவியங்களின் சிறப்புப் பரவவேண்டும். பெரியாரின் வரலாற்றையே ஓவியமாக வடிக்க எல்லா ஆற்றலும் பெற்றவர் புகழேந்தி. தமிழர்கள் இவருக்கு ஊக்கம் தந்து இதை நிறைவேற்றிக் கொள்ளுவது அறிவுடைமை.

**வே.ஆனைமுத்து**
*14.02.2002*

படுக்கைக் கோடாய் கிடந்த மனிதனை...
செங்குத்துக் கோடாய் திருத்திய -
தந்தையை
விதவிதமாய்த் தூரிகையால் நெய்த
புகழேந்திக்கு வாழ்த்துக்கள்.

***மானா பாஸ்கரன்*** -
தினகரன் நாளிதழ்

பெரியாரும் அவர்தம் கருத்துக்களும் மக்கள் மனதில் மீண்டுமொரு முறை சுடர்க என தூரிகை ஏந்தியுள்ளார் புகழேந்தி. அவர்தம் முயற்சி வெல்க. இன்னும் நூறு நூறு பெரியார்கள் நம் காலத்தில் எழுக!

**திலகவதி**
*5!02!02*

தந்தை பெரியாரின் - திசைமுகம் ஓவியத் துறையிலும் ஒரு புரட்சி எனச் சொல்லத் தோன்றுகிறது. கடவுள், சாதி, மதம், மூடநம்பிக்கை எனப் பன்முகங்காட்டி தமிழகத்தையும் , தமிழினத்தையும் படுபாதாளத்தில் வீழ்த்திக் கொண்டிருக்கும் பல்வேறு படையெடுப்புகளுக்கிடையில் தோழர் புகழேந்தியின் இந்த ஓவியக் கண்காட்சி, காண்போருக்குப் புத்துணர்ச்சியும் புதுமைச் சிந்தனையும் வழங்கும் என்பதில் அய்யமில்லை

**மு.வளர்மதி**

அய்யாவின் புருவமுடியும் தாடிமுடியும் புகழேந்தியின் தூரிகைமுடியாய்ப் பரிணாமம் பெற்றிருக்கிறது. இருளிலிருந்து ஒளிக்கு நம்மை அழைத்துச் சென்ற திசைமுகம் - நமது வரலாற்றின் ஓவியப் பதிவு.

**பழநிபாரதி**
*16.02.2002*

ஓவியர் புகழேந்தியின் வளர்ச்சியில் இன்னொரு கட்டத்தை இவ்வோவியங்கள் குறிப்பதாய்க் கொள்ளலாம். அவரது தனித்துவமான பாணியைத் தக்கவைத்துக் கொண்டதாலேயே நிமிர்ந்து நிற்கிறது திசைமுகம் ஓவியங்கள்.

**தேவகாந்தன்**
*16.02.02*

ஈழத் தமிழர் படும்பாட்டை, குசராத் பூகம்ப அழிவைத் தீட்டிக் காட்டிய ஓவியர் புகழேந்தி, தமிழர் எழுச்சிக்கும், மானமீட்புக்கும் காரணமான அய்யாவைத்

*தீட்டித் தன் சமுதாய அக்கறையை வெளிப்படுத்தி உயர்ந்து நிற்கிறார்.*

**தா.செ.மணி** *16.02.2002*

*தோழர் புகழேந்தியின் கைவண்ணத்தில் கல்வெட்டாய் நெஞ்சில் பதிகின்றன படங்கள். அய்யாவின் கருத்துக்கள் மக்கள் மனங்களில் முழுமையாய்ப் பதிய வில்லையே எனும் ஏக்கம் கூடவே எழுகிறது. தூரிகையால் தந்தை பெரியாருக்கு ஒரு காவியம் படைத்துள்ள ஓவியர் புகழேந்தியை வாழ்த்தி மகிழ்கிறேன்.*

**தமிழேந்தி**

*தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதை சமூக சீர்திருத்தக் கருத்துக்களின் உணர்வுகளையும், அதை நிறைவேற்றத் துடிக்கும் ஆவேசத்தையும் மனக்கண் முன் அப்படியே முன்நிறுத்தி இருக்கும் ஓவியர் புகழேந்திக்கு வாழ்த்துகள்!*

**ஆர். நல்லகண்ணு** *10.02.2002*

*துயில விரும்பாத*
*தூரிகை*
*தொடரட்டும்*
*சிறப்பு நோக்கி...*

**சி.இலங்கைநாதன்**

*தமிழர்களின் ஆணிவேரை ஓவியமாக்கித் தமிழர்களுக்கு மீண்டும் நினைவூட்டும் இவ்வோவியக் கண்காட்சி பாராட்டுக் குரியது. ஓவியர் புகழேந்தி மிகச்சிறந்த கலைஞர் என்பதில் ஐயமில்லை. பாராட்டுகள்.*

*கவிஞர்* **பொன்.செல்வகணபதி**

*தன்மானத் தலைவர் தந்தை பெரியாரை, நீண்ட காலங்களுக்குப் பிறகு நேரிலே பார்ப்பதைப் போன்ற உணர்வை என்னால் பெற முடிந்தது. ஓவியர் புகழேந்திக்கு நெஞ்சார்ந்த நன்றி.*

**செம்பை சேவியர்** *15.02.2202*

*தந்தை பெரியாரின் புரட்சி விதைகளை மானுடத்திற்கு ஓர் ஓவியக் கலைஞன் தன் முழுத் திறனையும் பயன்படுத்தி அறிமுகப்படுத்தியுள்ளது தலைசிறந்த நன்றி உள்ளவரின் வெளிப்பாடு!*

*அந்தக் கலைஞனுக்கு நாம் நமது நன்றியினைச் செலுத்துவோம். புகழ் என்ற பெயரை காரணப் பெயராக்கிக் கொண்டு விட்டார் இதன் மூலம்!*

**கலி.பூங்குன்றன்**

*புகழேந்தியவர்களின் பெரியார் ஓவியங்கள் உணர்வு தேங்கிய எழிற் கோலங்கள். அவற்றைக் காண்பது எழுச்சிமிக்க ஒரு பட்டறிவு.*

**கு.வெ.கி.ஆசான்** *15.02.2002*

*உலகத் தலைவர் அய்யா அவர்களை நேரில் கண்டு உரையாடிடும் வாய்ப்பினை, இக்காலச் சமுதாயத்திற்கு அய்யா அவர்களை நேரில் கண்டு உரையாடுவது போல அமைத்தமைக்கு உளங்கனிந்த நன்றி.*

*அய்யா அவர்களைத் தொகுத்தது போலத் தமிழர் தலைவர் இனமானப் போராளி கி.வீரமணி அய்யா அவர்களையும் தாங்கள் கைவண்ணத்தில் காண அவா. அம் முயற்சிக்கு ஈடுபட வேண்டி விழையும்*

**கோ. அண்ணாவி**

*அய்யாவின் முகங்களைப் பதிவு செய்யும் புகழின் முயற்சி பெரிதும் பாராட்டுக்குரியது.*

*அய்யாவின் முகங்கள் தமிழரின் நெஞ்சில் நிற்கும் வரை - தமிழன் தடம் புரளாமல் பயணிப்பான். திசைமுகமும் அம்முகம் எழுதிய தூரிகையும் வாழ்க!*

**அ.சேவியர் அருள்ராசு** *வழக்குரைஞர்*

*பெரியார் -*
*அவை வெள்ளி முடிகள் அல்ல*
*ஜெலட்டின் குச்சிகள்*
*அவரது விழிகள்*
*போலித்தனத்தைப் பொசுக்கிய*
*தீப்பந்தங்கள்*

உதடுகள் -
உண்மையைப் பொழிந்த
உலராத நீருற்று.

அவர்
கருஞ்சட்டை அணிந்த சமாதானப் புறா.

கருப்பு மெழுகுவர்த்தியின் நுனியில்
சுடரும் எரிதழல் போன்ற
அவரது தோற்றமே
அலாதியானதுதான்.

அவரது மூளையில் மிதந்த ஞான அமிலம்
தமிழினத்தின் மூலை முடுக்குகளில்
அப்பியிருந்த அசுத்தங்களை
எல்லாம்
அப்புறப்படுத்தியது.
அவரது சிந்தனை மின்னல்களைச்
சேமித்திருந்தால் அணு
மின்சாரத்துடன்
அளவிட்டுப் பார்த்திருக்கலாம்.

பெரியாரை முற்றிலும் மறந்துவிட்ட
தமிழர்களை மீளவும் சிந்திக்க
வைத்துள்ள
புகழேந்தியை வாழ்த்துகிறேன்.

**எழில் வேந்தன்**

ஓவியத்தில் தந்தை பெரியார் தேவைப்படுவதை போல - அதைவிட உயிரோடும் தந்தை பெரியார் இன்று தேவைப்படுகிறார்.

புகழேந்திக்குப் பாராட்டுகள்.

**ஈரோடு தமிழன்பன்**

20 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த பகுத்தறிவுவாதி தந்தை பெரியாரின் பல்வேறு முகத் தோற்றத்தை-அவரின் லட்சியம், அறிவின் தோற்றம் போன்றவற்றை - மிகத் தெளிவாகப் படமிட்டுக் காட்டுகிறது நண்பர் புகழேந்தியின் ஓவியம். ஒருவர் எவ்வளவு பெரிய மனிதர் என்பதை அவரின் முகம் காட்டும் என்பார் வள்ளுவர். தந்தை பெரியாரைப் பார்த்தாலே உத்வேகம் மனதில் உண்டாகும். இன்றைக்கு நண்பர் புகழேந்தியால் வரையப்பட்ட பெரியாரின் ஓவியங்களைப் பார்த்தால் அந்த உணர்வைப் பெற முடிகிறது.

**செ.துரைசாமி** *வழக்கறிஞர்*

ஓவியர் புகழேந்தியின் கோட்டோ வியங்கள் மிக ஆழமான - அழகான நேர்த்தியான வீச்சால் மனதில் ஒருவிதமான உணர்ச்சியை தூண்டிவிடுகின்றன. (அது தமிழின உணர்ச்சியாகத்தான் இருக்கும் எனக் கருதுகின்றேன்) பெரியாரால் நமது தமிழ்நாட்டுக்குப் பெருமை. மேலும் பெரியாரின் உருவத்தைச் சித்தரித்ததன் மூலம் அவரது பல கருத்துக்களை எழுதாமல் கோடுகளால் பெரியாரை மேலும் பெருமை அடைய செய்து இருக்கிறார். ஒவ்வொரு தமிழனும் பார்க்க வேண்டிய முக்கியமான நேரத்தில் முக்கியமான ஓவியங்கள். ஒவ்வொரு கோட்டோவியமும் அவரது தமிழ் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறது. மேலும் இது போன்ற தலைவர்களின் ஓவியங்கள் இளைய தலைமுறைக்கு நமது சரித்திரங்களைப் பார்ப்பதற்கு உற்சாகப் படுத்தும்.

எந்த ஓர் ஓவியத்தையாவது குறிப்பிட்டுப் பாராட்டலாம் என்றால் முடியவில்லை. காரணம் எல்லாமே சிறப்புமிக்க ஓவியங்கள். வாழ்த்துக்கள். பலஆண்டுகள் இந்தக் கோடுகள் மனதில் பதிந்து இருக்கும்.

**ரபீக் அகமது**

பெரியாரின் புகழுக்குப் புகழ் சேர்த்த புகழேந்தி உம் பணி சிறக்கட்டும். ஐயாவின் ((தோற்றம்) பிறப்பு- தொண்டு- இறப்பு (மறைவு)வரை படக்கதை போல் வெளியிட்டு வருங்காலக் குழந்தைகட்கு பகுத்தறிவுக் கருத்துக்களைப் பதிய வைப்பீர் என நம்பும்.

**சாந்தாரகுநாதன்** (போடி)

ஓவியர் புகழேந்தியின் திசைமுகம், கண்காட்சியைக் கண்டேன்; உளம்

பூரித்தேன்.

தன்மானம், பகுத்தறிவு, சமநீதி, சமத்துவம், மனித இனத்தின் விடுதலை இவற்றுக்காகத் தமது நீண்ட நெடிய வாழ்நாளெல்லாம் தன்னலமின்றிப் பணியாற்றிய புரட்சி வீரர் தந்தை பெரியாரின் வாழ்வும் பணிகளும், இன்றையத் தமிழ் மக்கள் - குறிப்பாக இளைஞர் உலகம் - தமது இதயத்தில் பொறிக்க வேண்டியவை. பெரியாரின் புரட்சிக் கருத்துக்களை அறிந்து கொள்ளத் தூண்டும் வகையில் , அந்த மாபெரும் தலைவரை அற்புத ஓவியங்களாகத் தீட்டியுள்ள ஓவியர் புகழேந்தி, தமிழினத்தின் கலைச் செல்வம் என்பதில் ஐயமில்லை; இவரது ஓவியப் பணி, மேன்மேலும் வளர்க; வெல்க; உலகமெல்லாம் பரவுக! உலகத் தமிழர்களின் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் , வளவாழ்வுக்கும் உறுதுணையாக, உத்வேகமூட்டும் சக்தியாக விளங்குமாக!

ஓவியர் புகழேந்திக்கு என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களுடன்.

**தி.க.சிவசங்கரன்** *(தி.க.சி) 26.04.2002*

ஓவியங்கள் நேர்த்தியாகத் தந்தை பெரியாரை நேரில் காண்பது போலவே உள்ளன.

இவை சின்னஞ் சிறு சிற்றூர்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டு விளக்கப்பட வேண்டும்.

**ந.சு.சண்முகம்**

லயம் மிக்க ஓவியங்கள். ஆதாரங்களைப் பிரமிப்புடன் தேடத் தூண்டும் ஆற்றல்.

**யமுனா ராஜேந்திரன்**

ஓவியர் புகழேந்தியின் கோட்டோ வியங்கள் மீண்டும் பெரியாரை உயிர்ப்பித்துள்ளது. வட மாநிலத்தில் மாதுரி தீட்சித்தின் அழகில் மனம் பறிகொடுத்து ஓவியமாகத் தீட்டிய எம்.எஃப். ஹுசைனைப் போல.. பெரியாரின் தொண்டுக்காகப் புகழேந்தி பெரியாரைப் படைத்துள்ளார். தமிழகத்தின் ஒவ்வொரு ஓவியனும் ஆற்ற வேண்டிய கடமைகளில் ஒன்றாக அது நமக்குத் தெரிகிறது. புகழேந்தியின் கோட்டோவியங்கள் பிரமிக்க வைக்கிறது. புகழேந்தியின் மீது எனக்கு எப்போதும் மதிப்புண்டு. ஏனெனில் அவர் தன்னை அரசியலோடு அடையாளம் காட்டிக் கொள்பவர். தொடர்க அவர் பணி...

**ச.பாலமுருகன்** வழக்குரைஞர்

தனது முகவரியை, தனது முகத்தைத் தமிழன் இழந்து நிற்கும் காலத்தில் அதற்கான காரணத்தைச் சுட்டிக் காட்டி - மீண்டும் பெரியார் பாதைக்குத் தமிழனை அழைத்துச் செல்ல வந்துள்ள தூரிகையே புகழேந்தி. பெரியார் இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகளையும், இப்படிப்பட்ட கண்காட்சி மூலமாகத் தமிழர்களுக்கு அளித்துத் தமிழர்களுக்கு வரலாற்றுயர்வையும், சமூக உயர்வையும் ஊட்ட புகழேந்தி முன்வர வேண்டும்.

தமிழனுக்கு வழிகாட்டியாய் விளங்கும் பெரியாரியலைத் தமிழன் புரிந்து கொண்டால், தமிழன் தலைநிமிர்வான். ஓவியத்தின் வலிமையை எங்களுக் கெல்லாம் உணர்த்திய புகழேந்திக்கு வாழ்த்துக்கள்.

**கி.சிதம்பரன்** வழக்குரைஞர்

தந்தை பெரியார் அவர்களின் முகத் தோற்றங்களின் மூலம் அவரின் உள்முகத் தோற்றங்களையும் உங்கள் தூரிகை வெளிக் கொண்டு வந்திருக்கிறது. உலகமெலாம் தமிழர்கள் பரவி இருக்கிற இச்சூழலில், தமிழின அடையாளமாகப் பெரியார் அவர்களை திசைமுகமாக்கிய உங்கள் கடமைஉணர்வு பாராட்டுக்குரியது. பெரியார் பற்றிய பன்முகச் சிந்தனையாளர்களின் கருத்துக்களையும் இணைத்து இக்கண் காட்சியை அமைத்திருப்பது மேலும் சிறப்புச் சேர்க்கிறது.

- **சூரியசந்திரன்** *(இன்தாம் இணையம்)*